

அமரர் **இராசதுரை காமாட்சிப்பிள்ளை**

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

ஞாபகார்த்த

# காமாட்சிதீபம்

22.04.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# அமரர். இராசதுரை காமாட்சிப்பிள்ளை

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவுமலர்

# காமாட்சி தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
அன்புடன் இன்சொல் பேசி,
குடும்பத்தின் குல விளக்காய்
எம் வாழ்வு வளம் பெற காலமெல்லாம்
கண்ணை இமை காப்பது போல்
எம்மைக் காத்து வளர்த்து உய்வித்து
இவ்வுலகில் தலை நிமிர்ந்து வாழ்வாங்கு வாழ
காலடி கட்டி வைத்து இனிய சொல் பேசி
இல்லம் வருவோரை இன் முகத்துடன் வரவேற்று
மின்னல் போல் சென்று இறைவனடி சேர்ந்த
எமது அன்பு தெய்வத்தின் பாதத்தில்
இம் மலரினை கண்ணீர் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
1929.10.10

விண்ணில்
2022.05.02

# இராசதுரை காமாட்சிப்பிள்ளை

## திதி வெண்பா

பிலவ வருடம் வைகாசி திங்கள்
இருபத்தெட்டாம் நாளில் அபர பட்ஷ ஸப்தமி திதியில்
உற்றாருக்கு உறுபலம் தந்த காமாட்சிப்பிள்ளை
எனும் நல்லாள் பார் விட்டு சிவன்தாள் பணிந்தாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விடயம் | பக்கங்கள் |
|---|---|
| 1) பஞ்சபுராணம் | 3 |
| 2) திருமதி காமாட்சிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை சுவடுகள் | 6 – 8 |
| 3) ஓராண்டு நினைவஞ்சலி | 9 |
| 4) ஆத்மா சாந்தி உரை | 10 |
| 5) 12 திருமுறைகள் | 11 – 13 |
| 6) விநாயகர் கவசம் | 14 – 16 |
| 7) விநாயகர் அகவல் | 17 – 19 |
| 8) காரிய சித்தி மாலை | 19 – 21 |
| 9) பிள்ளையார் கதை | 21 – 46 |
| 10) பிள்ளையார் பெருமை | 46 |
| 11) சரணம் சரணம் கணபதியே | 47 |
| 12) ஓம் என்னும் ப்ரணவ ரூப நாயகா | 48 |
| 13) நக்கீரதேவர் அருளிய விநாயகர் அகவல் | 48 – 54 |
| 14) 108 கணபதி போற்றி | 54 – 57 |
| 15) ஸ்ரீ முக்தி விநாயகர் அகவல் - ஸ்ரீ அருணகிரிநாதர் | 58 – 60 |
| 16) சக்திக் கவசம் | 61 – 62 |
| 17) அபிராமி அந்தாதி | 63 – 85 |
| 18) கௌரி காப்பு | 86 – 89 |
| 19) தேவி தோத்திரம் | 89 – 91 |
| 20) ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தோத்திரம் | 91 – 94 |
| 21) துணையாக வருவாய் | 94 – 95 |
| 22) ரோக நிவாரண அஸ்டகம் | 96 – 98 |
| 23) மாதா பராசக்தி | 98 – 99 |
| 24) ஓம் சக்தி | 99 – 101 |
| 25) ஸ்ரீ துர்க்கா அஷ்டகம் | 101 – 103 |
| 26) ஜெய ஜெய தேவி | 104 – 105 |
| 27) துக்க நிவாரண அஷ்டகம் | 105 -- 107 |
| 28) சகலகலாவல்லி மாலை | 108 – 109 |
| 29) நாகபூசணியம்மை தோத்திரம் | 110 |
| 30) காஞ்சி காமாட்சி | 111 |
| 31) காசி விசாலாட்சி | 112 |
| 32) மதுரை மீனாட்சி | 113 |
| 33) தில்லை சிவகாமி | 114 |
| 34) பதினாறு பேறும் பெற | 115 |
| 35) ஆரத்தி | 116 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 36) மங்களம் | 117 |
| 37) அம்பாள் துதிப்பாடல் | 118 – 119 |
| 38) உன் கருணை வழிய வேண்டும் | 119 – 120 |
| 39) காயத்ரி மந்திரங்கள் | 120 |
| 40) திருவெம்பாவை | 121 – 125 |
| 41) சிவபுராணம் | 126 – 128 |
| 42) நடராஜர் பத்துப் பாடல் | 129 – 134 |
| 43) சண்முக கவசம் | 135 – 139 |
| 44) கந்தசஷ்டி கவசம் - திருப்பரங்குன்றம் | 139 – 142 |
| 45) திருச்செந்தூர்த் தேவசேனாபதி | 143 – 152 |
| 46) திருவாவினன்குடி தெண்டபாணி | 152 – 157 |
| 47) திருவேரகம் - சுவாமிமலைக் குருநாதன் | 158 – 160 |
| 48) குன்றுதோறாடும் குமரன் | 161 – 166 |
| 49) பழமுதிர்சோலை பரமகுரு | 167 – 169 |
| 50) பச்சை மயில் வாகனனே | 170 |
| 51) முருகா! சரணம் | 171 – 173 |
| 52) கோளறு திருப்பதிகம் | 174 – 177 |
| 53) திருநீற்றுப் பதிகம் | 178 – 179 |
| 54) நமசிவாய பதிகம் | 180 – 181 |
| 55) திருக்கைலாயம் | 182 – 188 |
| 56) திருப்பொற்சுண்ணம் | 189 – 195 |
| 57) பிரதோஷப் பாடல்கள் | 196 – 198 |
| 58) பிரதோஷ காலத்தில் ஓதும் தேவாரங்கள் | 199 – 200 |
| 59) ஈஸ்வர தியானம் | 200 |
| 60) ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம் | 201 – 202 |
| 61) பிரதோஷப் பாடல் | 202 – 203 |
| 62) திருத்தொண்டர் தொகை | 204 – 207 |
| 63) தெட்சணாமூர்த்தி துதி | 208 – 209 |
| 64) தெட்சணாமூர்த்தி வழிபாடு | 209 – 213 |
| 65) நவக்கிரக துதி | 213 – 215 |
| 66) அருள்மிகு வைரவர் அர்ச்சனை மாலை | 216 – 220 |
| 67) ஐயப்பன் பாடல்கள் | 221 – 221 |
| 68) படியேறிவர வேண்டும் | 222 – 223 |
| 69) ஆஞ்சநேயர் பாடல்கள் | 223 – 224 |
| 70) ஆறுதல் நீ தாராய் | 224 – 225 |
| 71) பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா | 225 – 229 |
| 72) நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் | 230 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஞ்சபுராணம்

வதிரன் புலவோனை வானோர் தலைவனை
உதிரம் சொரிந்தெங்கள் உழுநிலத்தில் எழுந்தோனை
முதிர் ஞானப் பக்திகொண்டு முன்வந்து தொழுவோர்க்கு
எதிலுமே வெற்றி வரும் எடுத்ததெல்லாம் சித்திதரும்!

# விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து!

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பனஆகாதே
காரிகையார்கள் தம்வாழ்விலென் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியாமலர் பாதமிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோடாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன்னா நாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன்வந்து வெளிப்படும் ஆயிடிலே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ஒளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மால்அறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரிபோர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணிமாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்தபோதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேறும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**

## பற்றற்ற மாலை

ஊர்விட்டு ஊர்வந்து வாழ்ந்தாலும்
பார்தொட்டுப் பலதேசம் பறந்தாலும்
வேர்விட்டுக் கூர் கொண்டு குடைந்தாலும்
ஓர் உயிரும் உனக்கொன்றும் சொந்தமில்லை!

**(நாமும் நமதும் ஆண்டவன் சொத்து**
**அவனருள் ஒன்றே எமக்கரும் சொத்து)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி காமாட்சிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை சுவடுகள்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் போல் விளங்கும் ஈழத்திருநாட்டின் வட பகுதியாக விளங்குவது யாழ்ப்பாண குடா நாடாகும். இதன் வட பகுதியாக விளங்கும் தெல்லிப்பழை பிரதேசத்தின் மேற்கு எல்லையில் பன்னாலை என்னும் சிறிய கிராமம் அமைந்துள்ளது.

இங்கு பிரசித்தி பெற்ற ஆலயங்களும் கல்விக் கூடங்களும் விவசாய நிலங்களும் பனை வளம், தென்னை நிறைந்த சோலைகளாகவும் வெற்றிலை என்றால் பன்னாலை வெற்றிலை என்று கூறும் படியாக நிறைந்தும் சைவப் பெரியோர்களும் சைவமும் தமிழையும் கட்டிக் காத்து வளர்த்த கிராமமாக பன்னாலை என்னும் கிராமம் அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கிராமத்திலே புவனிகாவல சேகர முதலியார் வழித்தோன்றலில் வந்துதித்த கதிரேசு வேலாயுதம் அவர்களுக்கும் அவரின் பத்தினியாக விளங்கும் தங்கப்பிள்ளை (சுந்தரம்) அவர்கட்கும் சிரேஷ்ட புத்திரியாக காமாட்சிப்பிள்ளை அம்மையார் இப்புவியில் அவதரித்தார். இவரது உடன்பிறப்புக்களாக திருஞானசம்பந்தமூர்த்தி (மறைவு), சுப்பிரமணியம், நகுலேஸ்வரன் (மறைவு) அவதரித்தார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை சேர் கனகசபை வித்தியாசாலையில் பயின்றார். இவர் குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இருந்தபடியால் வீட்டுப் பொறுப்புக்களை ஏற்க வேண்டியிருந்தது. இதனால் படிப்பை முடித்து வீட்டு வேலைகள், பன்ன வேலைகள், பூமாலை கட்டுதல் போன்ற வேலைகள் செய்து சகோதரர்கள், தாய், தந்தையரைக் கவனித்து வந்தார். நேரம் பொன்னானது என்ற கூற்றுப்படி பயனுள்ள வழிகளில் நேரத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவழிப்பார். கஷ்டத்திலும் சந்தோஷங்களிலும் தன் மனதை ஒரு வழிப்படுத்தி வாழ்ந்தவர். விரதங்கள் அனுட்டிப்பதிலும் தூய்மையைப் பேணுவதிலும் காலை எழுந்து ஸ்நானம் செய்து தீட்சை பெற்று கடவுளை வணங்கும் பழக்கம் அவரிடம் காணப்பட்டது. வீட்டிற்கு வருவோரை உணவளித்து உபசரித்துத் தான் அனுப்புவார்.

இவருக்கு மணப்பருவம் எய்தியதும் தாய் தந்தையர் சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருநாவுக்கரசின் மகன் இராசதுரை என்பவருக்கு 1947ம் ஆண்டு நவம்பர் மாதம் இல்லற வாழ்க்கையில் இணைந்தனர். இவரது இல்லற வாழ்க்கையின் பயனாக சிரேஷ்ட புதல்வியாக விமலாதேவியையும் அவருடன் இராசகுமாரி, ஜெயந்தி, மனோகரன், மனோகரி, சிவகுமார், சுரேஸ் ஆகிய புத்திர செல்வங்களை பெற்று சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

இவர் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார். இவர் தனது மூத்த மகளை தொல்புரத்தில் வசித்து வந்தவரான பொன்னையா தம்பதிகளின் மகன் இராமநாதன் (ஆங்கில ஆசிரியர் விக்ரோறியாக் கல்லூரி) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து கபீரதன், பகீரதி என்ற பேரப்பிள்ளைகளையும் இரண்டாவது மகள் இராசகுமாரி (Royal Bromton Hospital) அவர்கள் பாலசுந்தரம் தம்பதியரின் புதல்வன் பராபரன் (பொறியியலாளர் லண்டன்) அவர்களை மணம் செய்து சிந்துஜா என்ற பேரப்பிள்ளையையும் மூன்றாவது மகள் ஜெயந்தி (ஆசிரியர்) உருத்திரபுரத்தில் வசித்தவராகிய சுப்பிரமணியம் தம்பதியினரின் மகன் கணேசதாசன் (அதிபர் உருத்திரபுரம் ம.வி) அவர்களை மணந்து தயாளன், துவாரகன், வைஷ்ணவி ஆகிய பேரப்பிள்ளைகளையும் நான்காவது மகன் மனோகரன் (லண்டன் வர்த்தகர்) மேரி என்பவரை மணந்து சினேட் அனு என்ற பேரப்பிள்ளையையும் ஐந்தாவது மகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரி கந்தர்மடத்தைச் சேர்ந்த காசிலிங்கம் தம்பதியினரின் புதல்வன் சிறிதரனை மணந்து சுரேஸ்கண்ணா, பிரணவன், சிந்துஜா என்ற பேரப்பிள்ளைகளையும் ஆறாவது மகன் சிவகுமார் (லண்டன் வர்த்தகர்) தொல்புரத்தைச் சேர்ந்த வைரவநாதன் தம்பதியினரின் புத்திரி வைதேகியை மணந்து லினேஸ் என்னும் பேரப்பிள்ளையையும் ஏழாவது மகனான அமரர் சுரேஸ் இறைவனடி சேர்ந்தார். இவர்கள் அனைவரையும் கண்ணை இமை காப்பது போல் பேணி வளர்த்தார். இவரது பெருமை சொல்ல முடியாது.

இவருக்கு மைத்துனர்களாக கருணேஸ்வரி, சீனிவாசகம், ஜெபரத்தினம், செல்வராணி, ஜெகதீஸ்வரி, ஆகியோர் மைத்துனர்களாக வாழ்ந்தார்கள். பூட்டப்பிள்ளைகள் சண்முகன், சங்கவி, கீன், றியா

இவர் கணவன் தன் வாழ்வை நிறைவு செய்ய முன்னர் சங்கானையில் வைரவர் கோயிலை முழுமையாகக் கட்டி கும்பாபிஷேகம் செய்து மற்றும் இவர் பன்னாலையிலும் பிள்ளையார் கோயில், வைரவர், சுப்பிரமணியக் கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்வதில் மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள்.

இவர் வைகாசி மாதம் 2ம திகதி ஞாயிற்றுக்கிழமை தனது கடமைகளை நிறைவேற்றி நித்திரைக்குச் செல்லும் போது அவரது உடல் மின்னல் வேகத்தில் கண் இமைக்கும் பொழுதில் சிவனடி சேர்ந்தது என்றால் இவரது இறை பக்தி சொல்லில் அடங்காததொன்றாகும்.

**ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி
## சுபகிருது வருடம்
## 22.05.2022
## வைகாசி 8ம் நாள் ஞாயிறு
## அமரபட்ச சப்தமி திதி

பன்னாலை வாழ் இராசதுரை காமட்சிப்பிள்ளை அவர்களின் நினைவாக அமரத்துவம் அடைந்தவர்களின் ஞாபகமாக மாதா பிதா குரு தெய்வம் எனப் போற்றி வழிபாடு செய்து வழிகாட்டிய தெய்வங்களின் நல்லாசிகளுடன் நம் முன்னோர் மூதாதையர் தோன்றலின் வம்சத்தினராகிய மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என மரபு வழியில் தாய் தந்தையரை வழிபாடு செய்து ஆத்மாஞ்சலியில் இறை வழிபாடு செய்து நன்றிக் கடனாக வருடாவருடந்தோறும் ஆத்மசாந்திப் வழிபாடும் பூஜை செய்து நம் குல வம்சம் விருத்தியாக பிதுர் ஆசிகள் பெற்று சைவசமயாச்சார வழிபாடே வாழ்க்கையாக அறம் எனப்படும் தான தர்மங்கள் செய்து அன்னதானம் வழங்கி யாவரும் இன்புற வாழ்த்தி விருந்துபசாரம் செய்தலே மானிடப்பிறவியின் பயனாகும்.

பிதுர்தோஷங்கள் நீங்க எள் கலந்த நீரும் தர்பணம் செய்து அன்னதானத்தில் பசுவிற்கும் காக்கை பட்சியாவற்கும் ஓர் பங்கிட்டு விரதம் அனுஷ்டிப்பதே சான்றாகும்.

அவ்வாறு குல தெய்வாலயங்களிலும் அபிஷேக ஆராதனைகள் மோட்சதீபம் நெய்த்தீபமாக ஏற்றிவணங்குதலே பிதுர்வழிபாடாகும். அன்னாரின் ஞபாகமாக திருஷீச்சரம் சந்தியிலும் திருவிழாப் பொலிவுடன் செய்து வரும் உபயத்தவர்களும் ஆவார்கள்.

அன்னாரின் ஓராண்டு நினைவஞ்சலியில் ஆத்மசாந்தியாக எல்லாம் வல்ல திருஷீசரம் பெருமானைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி**

இங்ஙனம்

சிவ ஸ்ரீ ராம் சண்முகானந்தக் குருக்கள்
திருஷீச்சரம் பாலசுப்பிரமண்ய சுவாமி கோயில்
திருஷீச்சரம் பிரதம குருக்கள்
தர்மாதிகர்த்தா
பன்னாலை தெல்லிப்பளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மா சாந்தி உரை

ஈழமணித் திருநாட்டிலே யாழ்பாடி பெற்ற யாழ்ப்பாண நகரிலே வேளாண்மையிலும், கல்வியிலும் சிறந்து விளங்கும் பன்னாலைக் கிராமத்திலே 1929ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி இராசதுரை காமாட்சிப்பிள்ளை அவர்கள் அவதரித்தார்.

இவர் கற்பக விநாயகன் மீது அதீத நம்பிக்கை கொண்டமையால் அமரரவர்கள் ஆலய நித்திய, நைமித்திய கிரியைகளில் பங்கேற்பது மட்டுமல்லாமல் ஆலயத்தின் சரியைத் தொண்டுகளிலும் கற்பக விநாயகனுக்காகவே தன்னையே அர்ப்பணித்து செய்வது மிகவும் சிறப்பானதொரு விடயமாகும்.

அன்னாரின் இழப்பானது பன்னாலைக் கிராமத்திற்கும், பன்னாலை வாழ் மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அமரரவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகனை வேண்டி நிற்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

ம.மகேந்திரசர்மா
வரத்தலம் கற்பக விநாயகர்
ஆலய ஆதீனகர்த்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருச்சிற்றம்பலம்

### 1ம் திருமுறை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

### 2ம் திருமுறை

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே.

### 3ம் திருமுறை

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர் அந்த ணர்பிரியாதசிற் றம்பலம்
நாடி னாய்இட மாநறுங் கொன்றை நயந்தவனே
பாடி னாய்மறை யோடுபல் கீதமும் பல்ச டைப்பனி கால்கதிர்
வெண்டிங்கள்
சூடி னாய்அரு ளாய்சுருங்கஎம தொல்வினையே.

### 4ம் திருமுறை

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ம் திருமுறை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

## 6ம் திருமுறை

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

## 7ம் திருமுறை

பித்தாபிறை சூடிபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே

## 9ம் திருமுறை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10ம் திருமுறை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## 11ம் திருமுறை

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்

கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்

காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

## 12ம் திருமுறை

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் .

## திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் கவசம் - 01

திருச்சிற்றம்பலம்

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
யளவுடா வதிகசவுந்தர தேக
மதோற் கடர்தா மமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க
தடவிழிகள் பால சந்திரனார் காக்க.

கவின்வளரு மதரங்கச முகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுலங் கிரிசைசுதர் காக்க
நனிவாக்கை விநாயகர் தாங்காக்க
அவிர்நகை துன்முகர் காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாச பாணிகாக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சித்தி தார்த்தர் காக்க.

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி காக்க
களங் கணேசர் காக்க
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநாய கன்
காக்க விதயந் தன்னைத்
தோமகலும் கணநாதர் காக்க
வகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமிரண்டையுந் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினகரர் காக்க விளங்குலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக்கிர துண்டர்
காக்க சகனத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவை
மங்கள மூர்த்தி உவந்து காக்க.

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் காக்க
ஆழ்தரச் செய் யாசாபூரகர் காக்க
விரல்பதும் வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர்காக்க
உமாபுத்திரர் தென்திசை காக்க
மிக்கநிரு தியிற் கணேசுரர் காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவாயுவிற்
கசகன்னர் காக்க திகழு தீசி
தக்கநிதிபர் காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகன்முழுங் காக்க
விரவினுஞ்சந்தி யிரண்டன் மட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க
விராக்கதர் பூத முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர் தாம் விரைந்து காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ் குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானியங் கிருக
மனைவி மைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர்
காக்க காமர் பவுத் திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

வென்றிசீ விதங்கபிலர் காக்க
கரியாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர் காளறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
அன்றவாங் கவர்தேகம் பிணியற
வச்சிரதேக மாகி மன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல் - 08

## (ஔவையார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பார்க் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன்முடியுந்
திரண்ட முப்புரிநூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக்களிறே!
முப்பழநுகரும் மூஷிகவாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள் செய்து
முன்னைவினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடமென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தயென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

## காரிய சித்தி மாலை - 07

திருச்சிற்றம்பலம்

பந்தம் அகற்றும் அனந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி ருத்து சுரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத்தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒனற்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகில் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைக்கண் எவன்
அந்த உலகமுதலாம் கணபதியை
உவந்தே சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க்கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி ஆகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாம் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

## பிள்ளையார் கதை

### காப்பு

திருச்சிற்றம்பலம்

கரும்பும் இளநீருங் காரெள்ளும் தேனும்
விரும்பும் அவல்பலமும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்தன் ஈன்றருளு மைந்தா — முரகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
எக்கதைக்கு நீயென்றுங் காப்பு.

### விநாயகர்துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுங்
கொண்டக்கால் வாராது கூற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும் வள்ளிக் கிழங்கும், மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும், வெள்ளைப் பாலும், மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில் கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்க சப்பாணி சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி, அண்டத் தமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே, எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக், குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே

## சரஸ்வதி துதி

புத்தகத்து உள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பெருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல்இசை நாடகம்
என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயபெ

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவன் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுற் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் பரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்

பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள்செய்கென
எமைஆ ளுடைய உடையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்

போய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனற்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்று அவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வுஆகித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என

மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்

மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநள் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்

சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கஎன
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்

பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப

மனையிடை வந்து மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி

ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்

ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வளந்தரு முதல்வன் மடமயில் காணக்

கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவெடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர் கிம்புருடா அலகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் தாரகை கந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினென் கணத்தில்உ_ள் ளவரும்
மணிக்கருங் களத்தை வந்தடைந்து அதன்பின்

மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்

பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்

சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பளைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பணிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக

மதர்விழி உமைபிடி வடிவம் தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்

தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்

மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்

கான்அமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி

அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தமூ டிகமாய் வந்து அவன் பொரவே
வந்து மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்

செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்உண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ

இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்று எண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு எண்ணிய பெருநாள்

ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனன் நகைத்தான் பரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூறுங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டவன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரமென்று

இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்.

எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனைக் கிளத்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யாவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திடு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்

வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கு அவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு

நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்துஎமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்

வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி

ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசு அகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருத்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாய்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே

உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு

தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன் வைத்து
உருத்தரப் பிரியஎன்று உரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை

அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி

விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகந் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகீரதன் என்னும் பார்த்திவன் இவனை

மதிதலந் தன்னில் மலர்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்பொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்

புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீா அப்பொருள் பெறுவீர
என்றுகன்று எறித்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு

அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்

ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வனைத் தருவோம் போமின் நீரென
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்

ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம்அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்

தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப

நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
ஒருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி

அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியற்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு

அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்

புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப

மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே

கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்

திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி

இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த

அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்

செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்

தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்து
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென

ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப

இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நமையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென்
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்

குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமையாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்

பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைந்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து

தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்

சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டிப் பதம்அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்

கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுங்க் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு

இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந் கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்வே றாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்

அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்

சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணில் வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்

புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்து அவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்

கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி

எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்கு அவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்

அப்பசி திர அருந்திய பின்னர்
ஆரை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து

திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## பிள்ளையார் பெருமை

1. பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

2. ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

3. ஆனைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறைத்தீர்த்தவர்

4. மஞ்சனிலே செய்யினும் மண்ணனாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

5. ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்

6. அவல் பொரிக்கடலையும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலை யின்றித் திண்ணுவார் கஷ்டங்களை போக்குவார்

7. கலியுகத்து விந்தையைக் காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம்போல் சுற்றுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சரணம் கணபதியே

சரணம் சரணம் கணபதியே
சக்தியின் மைந்தா கணபதியே

வரணும் வரணும் கணபதியே
வந்தே அருள்வாய் கணபதியே

அன்பே சிவமே கணபதியே
அருளும் தருவாய் கணபதியே
இன்னல் நீக்கும் கணபதியே
இன்பச் சோதியே கணபதியே

கண்ணே மணியே கணபதியே
கவலை நீக்கும் கணபதியே
பொன்னே மணியே கணபதியே
பொருளும் தருவாய் கணபதியே

ஆவணித் திங்கள் கணபதியே
அடியேன் தொழுதேன் கணபதியே
சேவடிப் பணிந்தேன் கணபதியே
செல்வம் தருவாய் கணபதியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் என்னும் ப்ரணவ ரூப நாயகா

ஓம் என்னும் ப்ரணவ ரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத நாயகா
தேவாதி தேவனே விநாயகா.

வல்வினைகள் தீர்க்கும் சக்தி நாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மௌனத்தின் முழுப்பொருளே நாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா.

பக்தர்களின் உறைவிடமே நாயகா - சர்வ
சக்திகளின் பிறப்பிடம் விநாயகா
முக்திதனை அளித்திடுவாய் நாயகா - உனை
நித்தம் பணிந்திடுவோம் விநாயகா.

**நக்கீரதேவர் அருளிய**
**விநாயகர் அகவல்**

**கணபதி வணக்கம் ஆசிரிய விருத்தம்**
சீர்கொண்ட கரிமுகமு மைந்து கையும்
சிறந்தவா பரணமுடன் ஒற்றைக் கொம்பும்
ஏர்கொண்ட விமலர்கடங் கலியைத் தீர்த்து
எழில்குகற்கு முன்பிறந்து அமரர் மெச்சப்
போர்கொண்ட பிரணவமாய்ப்பிரண வத்துள்
பெருமைசிவ லிங்கமென வந்த மூலம்
கார்கொண்ட பிண்ட மெங்குந் தானாய்
காத்திடுங் கணபதியை வணங்குவோமே

**அகவல்**
சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கர வணிந்த புண்ணியமூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக
ஏழை யடியேன் இருவிழி காண

வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுத்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுடநன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்

சிந்தூரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற் றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னாபரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்கு பட்டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந்தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கைப் பலதொளி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்க

தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாத மண்டர்கள் போற்ற
நாடிமெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சி தந்தருள்
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகபர சாதன மிரண்டு முதலி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி

வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜாட் சரமும்
ஓமென் றுதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைக ளிரண்டி னடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலங்குறித்து
மண்டல மூன்றும் வாய்வோர் பத்தும்

குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையும் காட்டி
ஆரா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டி
பஞ்சமூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின் பாதமும் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
நைவிழிஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையும் காட்டி
ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவணை பொற்கம லாசான்
திருவிளை யாடலுந் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகயி லாசச் சேர்வையுங் காட்டிச்

சத்தம் பிறந்த தலத்தையும் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாரையும் நீக்கிக்
கருவி கரணம் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்க ளிருடிகள் ஒருவரும் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சக்தி பராபரை சதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியார் ஞான மமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின் மயமான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்

தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந்தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி யிடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து

புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது மாயைக் கனவென காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுள்ளருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூசை நைவேத் தியமும்
பக்தியாய்க் கொடுத்துப் பரமனே போற்றி

ஏத்திய னுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்த குளிர்பதந் தந்து
ஆக மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவிலும் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டாவாழ்வையளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வழ்க்கை யிடையூ றகற்றிப்
புல்லரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி யென்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே

நல்வினை தீவினைநாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே பராந்தகன் நீயே
பக்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே

உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சாட் சரநிலை பாலித் தெனக்கு
செல்வமும் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயக
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்

புத்திரனே தரும் புண்ணிய முதலே
வெண்ணீ ரணியும் விமலன் புதல்வா
பெண்ணா முலையாள் பெருகுஞ் சரனை
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுகவாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயி றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடத் தருகிற்
றான த்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சி தானந்த சற்குருசரணம்
விக்கின விநாயகா தேவே ஓம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரகர சண்முக பவனே ஓம்
சிவ சிவ மஹாதேவ சம்போ ஓம்

## வஞ்சி விருத்தம்

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி யென்றிடக் கரும மாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே

## வெண்பா

ஓரானைக் கன்றை யமையாள் திருமகனைப்
பேரானைக் கற்பகத்தைப் பேணினால் வாராத
புத்தி வரும் வித்தைவரும் புத்திரசம் பத்து வரும்
சக்திதருஞ் சித்தி தருந்தான்...

## 108 கணபதி போற்றி

ஓம் விநாயகனே போற்றி
ஓம் வினைகள் தீர்ப்பவனே போற்றி
ஓம் அரசமரத்தடி அமர்ந்தவனே போற்றி
ஓம் அகந்தை அழிப்பவனே போற்றி
ஓம் அறுகினில் மகிழ்பவனே போற்றி
ஓம் அச்சம் தவிர்ப்பவனே போற்றி
ஓம் ஆனை முகத்தானே போற்றி
ஓம் ஆறுமுகன் சோதரனே போற்றி
ஓம் ஆதிமூலமானவனே போற்றி
ஓம் ஆனந்த வடிவினனே போற்றி
ஓம் இமவான் சந்ததியே போற்றி
ஓம் இடரைக் களைபவனே போற்றி
ஓம் ஈசன் தலைமகனே போற்றி
ஓம் ஈகை நெஞ்சினனே போற்றி
ஓம் உண்மைப் பரம்பொருளே போற்றி
ஓம் உலகத்தின் தலைவனே போற்றி
ஓம் ஊர்தோறும் உறைபவனே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பவனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் எளியோர்க்எளியவனே போற்றி
ஓம் என்னுயிர்த் தந்தையே போற்றி
ஓம் எங்கும் நிறைந்தவனே போற்றி
ஓம் எருக்கம்பூ சூடுபவனே போற்றி
ஓம் ஏழைப் பங்காளனே போற்றி
ஓம் ஏற்றம் அளிப்பவனே போற்றி
ஓம் ஐங்கரம் படைத்தானே போற்றி
ஓம் ஐந்தெழுத்தான் மகனே போற்றி
ஓம் ஒப்பில்லாத ஒருவனே போற்றி
ஓம் ஒளிமயமானவனே போற்றி
ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
ஓம் ஔவைக்அருளினாய் போற்றி
ஓம் கருணா மூர்த்தியே போற்றி
ஓம் கரணத்தில் மகிழ்பவனே போற்றி
ஓம் கண நாதனே போற்றி
ஓம் கணேச மூர்த்தியே போற்றி
ஓம் கண்கண்ட தெய்வமே போற்றி
ஓம் கலியுக தெய்வமே போற்றி
ஓம் கற்பக விநாயகனே போற்றி
ஓம் கந்தனுக்அண்ணனே போற்றி
ஓம் கருணைக் கடலே போற்றி
ஓம் காருண்ய மூர்த்தியே போற்றி
ஓம் கிருபா சமுத்திரமே போற்றி
ஓம் கீர்த்தி மிக்கவனே போற்றி
ஓம் குட்டில் மகிழ்பவனே போற்றி
ஓம் குறைகள் தீர்ப்பவனே போற்றி
ஓம் குணத்தில் குன்றே போற்றி
ஓம் குற்றம் பொறுத்தாய் போற்றி
ஓம் கூத்தன் பிள்ளாய் போற்றி
ஓம் கொழுக்கட்டை ஏற்பாய் போற்றி
ஓம் கோவிந்தன் மருகனே போற்றி
ஓம் சடுதியில் அருள்வாய் போற்றி
ஓம் சங்கஷ்ட ஹரனே போற்றி
ஓம் சதுர்த்தி நாயகனே போற்றி
ஓம் சிறிய கண்ணினாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி
ஓம் சுருதியின் கருத்தே போற்றி
ஓம் சுந்தர வடிவினனே போற்றி
ஓம் ஞாலம் காப்பவனே போற்றி
ஓம் ஞான முதல்வனே போற்றி
ஓம் தந்தம் உடைந்தவனே போற்றி
ஓம் தந்தம் ஏந்தியவனே போற்றி
ஓம் தும்பிக்கை முகனே போற்றி
ஓம் துயர் தீர்ப்பவனே போற்றி
ஓம் தெய்வக் குழந்தாய் போற்றி
ஓம் தேவாதி தேவனே போற்றி
ஓம் தொந்தி விநாயகனே போற்றி
ஓம் தொப்பையப்பனே போற்றி
ஓம் தோன்றாத் துணையே போற்றி
ஓம் நம்பினாரைக் காப்பாய் போற்றி
ஓம் நான்மறை காவலனே போற்றி
ஓம் நீதிநெறி மிக்கவனே போற்றி
ஓம் நீர்க்கரை அமர்ந்தாய் போற்றி
ஓம் பழத்தை வென்றாய் போற்றி
ஓம் பக்தரைக் காப்பாய் போற்றி
ஓம் பரிபூரணமானாய் போற்றி
ஓம் பாரதம் எழுதினாய் போற்றி
ஓம் பிரணவப் பொருளாய் போற்றி
ஓம் பிள்ளைக் கடவுளே போற்றி
ஓம் பிரம்மச்சாரியே போற்றி
ஓம் பிள்ளையார் அப்பனே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
ஓம் பிள்ளை மனத்தானே போற்றி
ஓம் புண்ணிய மூர்த்தியே போற்றி
ஓம் பெரிய கடவுளே போற்றி
ஓம் பேரருள் மிக்கவனே போற்றி
ஓம் பேதம் தவிர்ப்பவனே போற்றி
ஓம் மஞ்சளில் வாழ்பவனே போற்றி
ஓம் மகிமை நிறைந்தவனே போற்றி
ஓம் மகா கணபதியே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முதல்பூஜை ஏற்பவனே போற்றி
ஓம் முழுமுதல் கடவுளே போற்றி
ஓம் முக்கண்ணன் மகனே போற்றி
ஓம் முக்காலம் உணர்ந்தாய் போற்றி
ஓம் மூஞ்சூறு வாகனனே போற்றி
ஓம் மெய்யான தெய்வமே போற்றி
ஓம் மேன்மை மிக்கவனே போற்றி
ஓம் வல்லப கணபதியே போற்றி
ஓம் வரசித்தி விநாயகனே போற்றி
ஓம் வாழ்வு தரும் வள்ளலே போற்றி
ஓம் வானவர் தலைவனே போற்றி
ஓம் விக்னேஸ்வரனே போற்றி
ஓம் விக்ன விநாயகனே போற்றி
ஓம் வியாசருக்உதவினாய் போற்றி
ஓம் விடலைக்காய் ஏற்பாய் போற்றி
ஓம் வீதியில் உறைவாய் போற்றி
ஓம் வெள்ளை மனத்தாய் போற்றி
ஓம் வெற்றி அளிப்பாய் போற்றி
ஓம் வேழ முகத்தவனே போற்றி
ஓம் வையம் வாழ்விப்பாய் போற்றி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முக்தி விநாயகர் அகவல்
## ஸ்ரீ அருணகிரிநாதர்

அரகர சிவ சிவ நமோ நமோ
ஆகு வாகனனே நமோ நமோ
இபமுகத் தோனே நமோ நமோ
ஈசுவரன் மகனே நமோ நமோ
உமையாள் சுதனே நமோ நமோ
ஊனிற் பெரியோய் நமோ நமோ
எமையாள் பவனே நமோ நமோ
ஏழை பங்காளாய் நமோ நமோ
ஐயா துய்யாய் நமோ நமோ
ஒற்றை மருப்பாய் நமோ நமோ
ஓதிய மறையே நமோ நமோ
ஔவைக் கினியாய் நமோ நமோ
அகரப் பொருளே நமோ நமோ
கணநா யகனே நமோ நமோ
கிருபைக் கடலே நமோ நமோ
கீதகிண் கிணியாய் நமோ நமோ
குஞ்சரக் கன்றே நமோ நமோ
உறும் பரனே நமோ நமோ
கெதியளிப் பவனேநமோ நமோ
கேள்வி விலாசா நமோ நமோ
கையைந் தவனே நமோ நமோ
கொழிந்திடு முதலே நமோ நமோ
கோவே தேவே நமோ நமோ
கௌவைத் துணையே நமோ நமோ
சதுர்மறைப் பொருளே நமோ நமோ
சாய்மறைச் செவியாய் நமோ நமோ
சிவன் கண்மணியே நமோ நமோ
சீவ சஞ்சிதமே நமோ நமோ
சுருதி விளக்கே நமோ நமோ
சூர சங்காரா நமோ நமோ
ஜெயஜெய விநாயகா நமோ நமோ
சேய்நூற் கரசே நமோ நமோ
சைவக் குருவே நமோ நமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் பொருளே நமோ நமோ
சோக விநாசா நமோ நமோ
சௌரியக் களிறே நமோ நமோ
தண்டைக் காலாய் நமோ நமோ
தாமரைக் கரத்தாய் நமோ நமோ
திருமால் மருகா நமோ நமோ
தீங்கு தீர்ப்பவனே நமோ நமோ
தும்பிக் கையாய் நமோ நமோ
தூல சூக்குமத்தோய் நமோ நமோ
தெய்வ சிகாமணி நமோ நமோ
தேவர்கள் தேவே நமோ நமோ
தையல் வல்லபையாய் நமோ நமோ
தொண்டர்க் கிதமே நமோ நமோ
தோத்திரப் பிரியாய் நமோ நமோ
தௌவை தீர்ப்பவனே நமோ நமோ
நம்புந் துணையே நமோ நமோ
நாக பூஷணனே நமோ நமோ
நித்தன் மதலாய் நமோ நமோ
நீறணி பவனே நமோ நமோ
நுகருமா யமுதே நமோ நமோ
நூறாப் பேரே நமோ நமோ
நெற்றிக் கண்ணாய் நமோ நமோ
நேமியந் திரத்தாய் நமோ நமோ
நைவளத் துரந்தோய் நமோ நமோ
நொந்தார்க் காவாய் நமோ நமோ
நோய்தீர்ப் பவனே நமோ நமோ
நௌவி தர்த்தோய் நமோ நமோ
பதினோ ருகையாய் நமோ நமோ
பாத விநாசா நமோ நமோ
பிணிக்கு மருந்தே நமோ நமோ
பீடை தீர்ப்பவனே நமோ நமோ
புத்தி தந்தவனே நமோ நமோ
பூமகள் மருகா நமோ நமோ
பெற்றோர் மகிழே நமோ நமோ
பேழை வயிற்றாய் நமோ நமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையர வணிந்தாய் நமோ நமோ
பொன்றாக் குன்றே நமோ நமோ
போதப் பொருளே நமோ நமோ
பௌவ வணத்தோய் நமோ நமோ
மதியளிப் பவனே நமோ நமோ
மாதையில் வாழ்வே நமோ நமோ
மிகுதி யானவனே நமோ நமோ
மீதோர் வேந்தே நமோ நமோ
முக்கண் ணுடையாய் நமோ நமோ
மூவரின் முதலாய் நமோ நமோ
மெய்பொருட் கிரியே நமோ நமோ
மேலாம் பதமே நமோ நமோ
மைநிற மணியே நமோ நமோ
மொழிவார்க் கருளே நமோ நமோ
மோதகக் கையாய் நமோ நமோ
மௌலி தரித்தோய் நமோ நமோ
வல்லபை மணாளா நமோ நமோ
வாமன ரூபா நமோ நமோ
வித்தைக் கிறைவா நமோ நமோ
வீரதண் டையனெ நமோ நமோ
உத்தம தேவே நமோ நமோ
ஊனந் துறப்பாய் நமோ நமோ
வெயிலவற் கினியாய் நமோ நமோ
வேண்டிலி நாயகா நமோ நமோ
வையம் புரந்தோய் நமோ நமோ
வௌதர் பரனே நமோ நமோ
ஒப்பிலா மணியே நமோ நமோ
ஓம்பொரு லாளா நமோ நமோ
மகா கணபதியே நமோ நமோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்திக் கவசம்

1. அங்கையில் கரகம் தாங்கும் பிரமாணி அருளி னோடும்
துங்கமென் சென்னி காக்க: வயிணவி துகளி லாகம்
எங்கணும் காக்க செய்ய ஏந்தெழில் உருத்தி ராணி
தங்கும்எண் திசையும் அன்பு தழைத்திட இனிது காக்க

2. கொன்னுனைச் சூலிசென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிழைதாழ்சென்னி வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் புருவம் நாளும் பரிவொடும் உமையாள் காக்க
என்னையாள் முக்கண் ஈசன் இறைவிகண் இணைகள் காக்க

3. வயமிகும் இமய வல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையோடு விசயை மேல்கீழ் இதழினைச் சிறந்து காக்க
அயலுடைச் சுருதி தூய அஞ்செவி காக்க தண்ணெண்
பயின்மலர் உறையுஞ் செய்வி பல்வினை உவந்து காக்க

4. சண்டிமென் கபோலம் காக்க தவள நாள் மலரில் வைகும்
ஒண்தொடி நன்னாக் காக்க விசயைமங் கலைமற் றொவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியா யனிஎஞ் ஞான்றும்
முண்டக மலரில் தூய முகத்தினைச் சிறந்து காக்க

5. காளமுண் டிருண்டநீல கண்டிமென் கழுத்துக் காக்க
கோளில்பூ தார சத்தி சுவர்ப்புறம் காக்க கூர்மி
நீளொளிச் சந்தி காக்க வயிந்திரி நெறியி னோடும்
தோளிணை காக்க பத்மை துணைமலர் அங்கை காக்க

6. கமலைகை விரல்கள் காக்க விரசைகை உகிர்கள் காக்க
திமிரம்உண் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையும் செல்வி
எமதிரு வாகுமூலம் காக்கவா னவர்கள் ஏத்த
அமிர்தல கரிநாள் நாளும் அகன்மணி மார்பம் காக்க

7. தரித்திரி இதயம் காக்க தயித்தியர்ச் செகுப்போள் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினில் இறைமை பூண்டோள்
திருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதி தன்னுள்ளத்
தருத்தியின் உந்தி காக்க அசைவளர் முதுகு காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கருதரு விகடை கடிதலம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனம் காக்க குகாரணி குய்யம் காக்க
அருள்தர வரும் அபாய கந்தினி அபானம் காக்க
தெருளுடை விபுலை என்றும் சிறப்புடைக் குறங்கு காக்க

9. ளளிதைமென் முழந்தாள் காக்க இயற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாள்ந்த பரட்டினைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்தில் செல்வோள் அணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர்நகம் விரல்கள் சந்திரி உக்கிரி உவந்து காக்க

10. தலத்துறை மடந்தை உள்ளங் காலினை காக்க தண்ணென்
மலர்த்திரு மனையைக் காக்க வயங்குகேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க பிரியகரை ஒழிவ றாது
நலத்தகு மக்கள் தம்மை நன்குறக் காக்க அன்றே

11. உயர்சனா தனிஎஞ் ஞான்றும் ஒழிவறும் ஆயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவும் மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவும் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி இனிது காக்க

12. சற்கதி பிரதை நல்லோர் இயைபினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரில் நீரில் வெளியினில் வனத்தில் சூதில்
இப்புறம் அதனில் ஓங்கு சர்வாணிகாக்க என்னாப்
பொற்றரு மலர்கள் தூவிப் புங்கவர் ஏத்தி னாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

## கணபதி காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

## 1. ஞானமும் நல்வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

## 2. பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

## 3. குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

## 4. உயர் பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

6. மந்திர சித்தி பெற

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.

7. மலையென வரும் துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.

8. பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

9. அனைத்தும் வசமாக

கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.

## 10. மோட்ச சாதனம் பெற

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

## 11. இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானம் தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

## 12. தியானத்தில் நிலைபெற

கண்ணியது உன்புகழ் கற்பது உன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

## 13. வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 14. தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.

### 15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

### 16. முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

### 17. கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

### 18. மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. பேரின்ப நிலையடைய**

வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

**20. வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக**

உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.

**21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய**

மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

**22. இனிப் பிறவா நெறி அடைய**

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

**23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க**

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது என்பர் கூட்டம்
தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

**24. நோய்கள் விலக**

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

**25. நினைத்த காரியம் நிறைவேற**

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.

**26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக**

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.

**27. மனநோய் அகல**

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய**

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

**29. எல்லா சித்திகளும் அடைய**

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்
பராசத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

**30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க**

அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!

**31. மறுமையில் இன்பம் உண்டாக**

உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

**32. துர்மரணம் வராமலிருக்க**

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!

**33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க**

இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

**34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க**

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

**35. திருமணம் நிறைவேற**

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

**36. பழைய வினைகள் வலிமை பெற**

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 37. நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை் விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

### 38. வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.

### 39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

### 40. பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

### 41. நல்லடியார் நட்புப் பெற

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

### 42. உலகினை வசப்படுத்த

இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

### 43. தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

### 44. பிரிவுணர்ச்சி அகல

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.

### 45. உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கை அன்றே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 46. நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை
வாழ்த்துவேனே!

### 47. யோகநிலை அடைய

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

### 48. உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

### 49. மரணத் துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

### 50. அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாராயணி கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

### 51. மோகம் நீங்க

அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

### 52. பெருஞ்செல்வம் அடைய

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

### 53. பொய்யுணர்வு நீங்க

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

### 54. கடன் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55. மோனநிலை எய்த**

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று
இல்லையே.

**56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக**

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவர் இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

**57. வறுமை ஒழிய**

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

**58. மனஅமைதி பெற**

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர

தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை நீள்சிலையும்
அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய் அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

### 60. மெய்யுணர்வு பெற

பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?

### 61. மாயையை வெல்ல

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

### 62. எத்தகைய அச்சமும் அகல

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.

### 63. அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64. பக்தி பெருக**

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

**65. ஆண்மகப்பேறு அடைய**

ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!

**66. கவிஞராக**

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன்தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

**67. பகைவர்கள் அழிய**

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

**68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக**

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

**69. சகல சௌபாக்கியங்களும் அடைய**

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

**70. நுண் கலைகளில் சித்தி பெற**

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.

**71. மனக்குறைகள் தீர**

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!

**72. பிறவிப் பிணி தீர**

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 73. குழந்தைப் பேறு உண்டாக

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே.

### 74. தொழிலில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

### 75. விதியை வெல்ல

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

### 76. தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை
மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

### 77. பகை அச்சம் நீங்க

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

**78. சகல செல்வங்களையும் அடைய**

செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.

**79. கட்டுகளில் இருந்து விடுபட**

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று எம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.

**80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட**

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! எண்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.

**81. நன்னடத்தை உண்டாக**

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**82. மன ஒருமைப்பாடு அடைய**

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.

**83. ஏவலர் பலர் உண்டாக**

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

**84. சங்கடங்கள் தீர**

உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

**85. துன்பங்கள் நீங்க**

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.

**86. ஆயுத பயம் நீங்க**

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.

**87. செயற்கரிய செய்து புகழ் பெற**

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

**88. எப்போதும் அம்பிகை அருள் பெற**

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர் தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

**89. யோக சித்தி பெற**

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு
மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

**90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க**

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற**

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

**92. மனநிலை பக்குவமடைய**

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

**93. உள்ளத்தில் ஒளி உண்டாக**

நகையே இ∴திந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

**94. மனநிலை தூய்மையாக**

விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.

**95. மன உறுதி பெற**

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன் அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**96. எங்கும் பெருமை பெற**

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

**97. புகழும் அறமும் வளர**

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

**98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற**

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.

**99. அருள் உணர்வு வளர**

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை் கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை் வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

**100. அம்பிகையை மனத்தில் காண**

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும் வெண்ணகையும்,
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும்
உதிக்கின்றனவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. **நூற்பயன்**

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு
இல்லையே...

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீக்கிச்
சிரந்தழுவு சைவநெறி திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெட் புகலியர் கோனமுது செயத்திருமுலைப்பால்
சுரந்து அழித்த சிவகாமசுந்தரிபூங் கழல் போற்றி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
எண்ணின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே காத்தென்னைத்
தேற்றிடுவாய் காளிமகா தேவியரே காலமெல்லாம் நின்னரிய
காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன் எண்ணும் கருமம் இனிதாக
முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய் 38
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு வல்லமையைத்
தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பை அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா பால்பழங்கள்
வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள் நானுமக்குத்
தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா காளிமகா தேவியரே
காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே காப்பெனக்குப்
போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமம் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன் காலைப்பொழுதெழுந்து
காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போற் கனன்றிடுவேன்
தீமைச்செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தொரு நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளு.

## தேவி தோத்திரம்

வாழ்வு மானவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உலகையீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக்காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்தையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையானவள் துர்க்கா ஜெயமுமானவள்
அம்மையானவள் துர்க்கா தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அயபவீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துரக்கையே

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் திருசூலி யானவள்
திருநீற்றில் என்னிடம் திகளும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுதேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகுநேரத்தில் என்னை தேடி வருபவள்
ராகுகாலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்.
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக்கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக்கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெயதுர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

## ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

கற்பூர நாயகியே, கனக வல்லி,
காளி மகமாயி கருமாரி அம்மா,
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா,
பூவிருந்தவல்லி தெய்வ யானை அம்மா,
விற்கோல வேத வல்லி விசாலாட்சி,
விழிக்கோல மாமதுரை மீனாட்சி,
சொற் கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே,
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே. – கற்பூர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனம் முழுவதும் ஆளுகின்ற புவனேஸ்வரி,
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி,
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி,
நம்பினவர் கை விளக்கே சர்வேஸ்வரி,
கவலைகளைத் தீர்த்து விடும் காளீஸ்வரி,
கார் இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி,
உவமானப் பரம் பொருளே ஜகதீஸ்வரி,
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி. – கற்பூர

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்,
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா,
கண்ணீரை துடைத்துவிட ஓடிவா அம்மா,
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா,
சின்னவனின் குரல் கேட்டு உன் முகம் திருப்பு,
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு. – கற்பூர

கண் இரண்டும் உன் உருவே காண வேண்டும்,
கால் இரண்டும் உன் அடியே நாட வேண்டும்,
பண் அமைக்கும் நா உனையே பாட வேண்டும்,
பத்தியோடு கைஉனையே கூடவேண்டும்,
எண்ணம் எல்லாம் உன் நினைவே ஆக வேண்டும்,
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆக வேண்டும்,
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா,
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா. – கற்பூர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியினுன் குங்குமமே நிறைய வேண்டும்,
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்,
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்,
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்,
சுற்றம் எல்லாம் நீடூழி வாழ வேண்டும்,
ஜோதியிலே நீ இருந்து ஆள வேண்டும்,
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா?
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா. – கற்பூர

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றிக் காவலுண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தமுண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உன் பிள்ளையன்றோ? – கற்பூர

அன்புக்கு நான் அடிமை ஆக வேண்டும்,
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்,
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்,
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்,
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்,
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்,
என் பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்,
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும் - கற்பூர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை,
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை,
நம்பிடவோ மெய் அதனில் ஷக்தி இல்லை,
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை,
செம்பவள வாய் அழகி உன் எழிலோ,
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை,
அம்பளவு விழியாளே, உன்னை என்றும்,
அடி பணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை – கற்பூர.

காற்றாகிக் கனலாகிக், கடலாகினாய்,
கருவாகி, உயிராகி, உடலாகினாய்
நெற்றாகி இன்றாகி நாளாகினாய்,
நிலவாகிப், பயிராகி, உணவாகினாய்,
தோற்றாலும், ஜெயித்தாலும் வாழ்வாகினாய்,
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்,
போற்றாத நாளில்லை தாயே உன்னை,
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை. – கற்பூர

## துணையாக வருவாய்

**பல்லவி**

உன்னுடைய பார்வை யொன்றே உறுதுணையாய் வருகுதம்மா
கும்மிருட்டு பாதையிலும் பேரொளியாய் தெரியுதம்மா

**அனுபல்லவி**

என்னுடைய ஆட்டமெல்லாம் நீ அமைத்த மேடையிலே
இசைவதுவும் அசைவதுவும் நின் கடைக்கண் சாடையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

சிற்றிடையில் சிவந்தபட்டு திருக்கரத்தில் திரிசூலம்
நெற்றியினில் செந்தூரம் நீள்விழியில் கருணைமழை
தெல்லிநகர் துர்க்கைஅம்மா உன்னழகைப் பார்ப்பதற்கு
என்முகத்தில் அமைந்திருக்கும் இருவிழியால் இயன்றிடுமோ.

சிங்கத்திலே நீவந்து சிறியேனைக் காத்திடுவாய்
எங்கள் பல குறையனைத்தும் ஈன்றவளே நீயறிவாய்
சிறியேங்கள் அழைத்தகுரல் திருச்செவியில் ஏற்றருள்வாய்
அறிவேதும் இல்லாதெம் அன்புமொழி கேளுமம்மா

அம்பிகையே உலகீன்ற ஆரணியே காரணியே
செம்பவள மேனியள சிவக்கொழுந்தே வந்தருள்வாய்
அணுவாகி உயிராகி ஐம்பூதப் பொருளாகி
துணையாகி எமைக்காக்கும் துர்க்கையம்மா வந்தருள்வாய்

சுற்றிநிற்கும் உலகமெல்லாம் துர்க்கையென்று சொல்லுதம்மா
சூழ்ந்திருக்கும் உயிர்களெல்லாம் துதிக்குதம்மா உன்புகழை
வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் வணங்கிடுவேன் உன்னடியை
வரஇருக்கும் பிறவியிலும் வாழ்த்திடுவேன் உன்னருளை

கேட்டவரந் தந்திடுவாய் கேதார நாயகியே
சூட்டுமலர்த் தாள்சரணம் சுந்தரியே சரணமம்மா
சர்க்கரையாய் முக்கனியாய்த் தமியேங்கள் மனத்தினிக்கும்
துர்க்கா மகேஸ்வரியே சரணமலர் சரணமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோக நிவாரண அஸ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
  பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
  சங்கரி யுன்னைப் பாடி டுமே
நஹநஹ தகதக பசபச வெனவே
  தளிர்ந்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோக நிவாரணி
  தாபநிவாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தரணி தேவி
  கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
  தாண்டவ நடன ஈச்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
  முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
  தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
  கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
  நீர்நிதி நீயே நீர்ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
  மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
  தாபநி வாரணி ஜெய துர்க்கா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினியாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்ற தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

திருமகளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹம்
சாரிணி சந்த்ர கண்டினியே
ஜெய ஜெய கூஷ்மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்யவளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

### மாதா பராசக்தி

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

மாதா பராசக்தி வையமெல்லாம் நீநிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்கு பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்லாய் எனதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னு நவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

மலையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

## ஓம் சக்தி

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
    நிறைந்த சுடர்மணிப் பூண்,
பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாம் இவள்
    பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
    வையக மாந்தரெல் லாம்,
தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர்சக்தி,
    ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நல்லதை நமக்கிழைப் பாள்,
அல்லது நீங்கும்" என் றேயுல கேழும்
அறைந்திடு வாய் முரசே
சொல்லத் தகுந்த பொருளன்று காண்இங்கு
சொல்லு மவர் தமையே,
அல்லல் கெடுத்த ரர்க்கிணை யாக்கிடும்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்.

நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பி விட்டோம்
கும்பிட்டெந் நேரமும் "சக்தி" யென்றாலுனைக்
கும்பிடு வேன், மனமே
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாத படி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்

பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்ந்திடு
போற்றி உனக்கிசைத் தோம்
அன்னை பராசக்தி என்றுரைத் தோம் தலை
அத்தனை யுங்களைந் தோம்
சொன்ன படிக்கு நடந்திடு வாய், மன
மேதொழில் வேறில்லை, காண்
இன்னு மிதேயுரைப் போம், சக்தி, ஓம்சக்தி,
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாகி விளங்கிடு வாய்
தெள்ளு கலைத்தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடு வேன்
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
இராதென்றன் நாவினி லே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல்.

## ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

இன்ப நலன் அளிப்பவளை
இனியனவே தருபவளை
அன்புடைய அன்னையளை
அருஞ்சிவனை மணந்தவளை
என்னுடைய இதயத்தே
பொன்னுயிராய் இருப்பவளை
நன் மலராய் பூஜித்தே
நமோ துர்க்கா என்றிடுவேன்

துங்க எழிற் கரிமுகனைத்
துர்க்கை நீ ஈன்றெடுத்தாய்
சங்கரனார் தாண்டவத்தில்
சக்தியே நீ பங்கெடுத்தாய்
பொங்குசினப் பேரளியில்
பொருந்த நீ இருந்திட்டாய்
தங்கிடுவாய் எங்குலத்தில்
தவ ஒளியே துர்க்கையளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைதந்து இல் வாழ்வின்
இடர் நீக்கிக் காப்பவளே
விசையுடனே மணமாலை
விருப்பமொடு அளிப்பவளே
திசை எல்லாம் திருவிளங்கத்
திருவடியால் நடந்தவளே
அசைவற்ற பொருளதையும்
ஆட்சி செய்வாய் துர்க்கையளே

வேண்டியன விரும்பியன
வேண்டியவா றளித்திடுவாள்
காண்டிபத்தைக் கதையதனைக்
காந்தமிகு சூலமதை
ஆண்டருளும் அன்னையவள்
ஆட்சி செய்ய ஏந்திட்டாள்
தூண்டா நல் மணி விளக்கைத்
தூய துர்க்கைத் தாயென்போம்

உலகையிவள் ஈன்றெடுத்தாள்
உடைமை மிகத் தானளித்தாள்
கலகமிடும் கள்ளரக்கக்
கலிமாய்த்துக் கவியிசைத்தாள்
திலக ஒளி நுதலுடையாள்
திருநிறைந்த வடிவுடையாள்
அலகில் நலம் அளிப்பவளை
அன்னை ஸ்ரீ துர்க்கையென்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரத்துக் கந்தனையே
சுடர் கூட்டி ஈன்றவளார்
விந்தை மிகப் பொங்கிடவே
விளங்கு நலம் தருபவளார்
அந்தமொடு ஆதியின்றி
அன்னையென வந்தவளார்
சந்த மிகப் பொலிகின்ற
சக்தி ஸ்ரீ துர்க்கை என்போம்.

செல்வமொடு செல்வாக்கைச்
செயம் பெறவே தந்தவளை
நல்லறிவும் நல்லொளியும்
நல்லனவும் நிறைந்தவளை
வெல்லுகின்ற வழியாளை
வெஞ்சுடரின் விழியாளை
சொல் மலரால் பூஜித்துச்
சொர்ண ஒளி பெற்றிடுவோம்.

குமரிமுனை நிற்கின்ற
குலவிளக்கே துர்க்கையளே!
சமயமதில் வழிகாட்டும்
சண்டிகையே துர்க்கையளே!
சமரிட்டுச் சங்கடத்தைச்
சங்கரித்த துர்க்கையளே!
எமதன்னை துர்க்கையளே!
என்று மெம்மைக்காப்பாற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்

துர்க்கையம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் போகும் சர்வமங்களம் கூடும்

(ஜெய ஜெய தேவி)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றி வரும் பகைவிரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும் வெற்றிப் பாதையைக் காட்டும்

(ஜெய ஜெய)

ஆயிரம் கரங்கள் உடையவளே - ஆதி சக்தியவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய் போல் நம்மை
காப்பவளே

(ஜெய ஜெய தேவி)

சங்கு சக்கரமும் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன்
சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் (ஜெய ஜெய)
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடிமேல் சூடி
நின்றாள்
கருணைக் கண் கொண்டு பார்த்திருப்பாள் மங்கள வாழ்வும்
தந்திடுவாள்

(ஜெய ஜெய)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் கலைமகள் அவளே திருவருள் புரியும் மலை மகளும் அவளே
அங்கையர்க்கண்ணியும் அவளே மங்கையர்கரசியும் அவளே
(ஜெய ஜெய)

முண்டக் கண்ணியும் அவளே அபிராமி அம்மையும் அவளே
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்
கனக துர்கா தேவி சரணம்
கனக துர்கா தேவி சரணம்

## துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதி அணி சூலினி
மன்மத பாணியளே!
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் களிமுகம் கண்டநல்
கற்பகக் காமினியே!
ஜெயஜெய சங்கரி! கேளரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!

கான் உறுமலர் எனக் கதிர் ஒளிகாட்டிக்
காத்திட வந்திடுவாள்!
தான் உறு தவஒளி தார்ஒளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாள்!
மான் ஊறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்!
ஜெய ஜெய சங்கரி! கேளரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரி! சௌந்தரி! சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே!
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே!
எம்குலம் தழைத்திட எழில்வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!

தணதண தந்தண தவில் ஒலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்!
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்!
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!

பஞ்சமி! பைரவி! பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக்
கொடுத்த நல்குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல்
சக்தி எனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியபடி நீ அருளிட வருவாய்
எம்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!

ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி!
ஜெய ஜெய ஸ்ரீ தேவி!
ஜெய ஜெய துர்க்கா! ஸ்ரீ பரமேஸ்வரி!
ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்கள காளி!
ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய சங்கரி! கேளரி! கிருபாகரி!
துக்க நிவாரணி காமாஷி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பாடி
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.
சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூசணியம்மை தோத்திரம்

எனக்கொன்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன்.
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

முந்நாளில் முருகனுக்குச் சக்தி யீந்தாய்
முனிவர்க்குந் தேவர்கட்கும் முதன்மை யீந்தாய்
பின்நாளில் சங்கரர்க்கும் பெருதை யீந்தாய்
பேரின்பக் காதல் வளம் பெருக வைத்தாய்
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக் கீந்தாய்
இந்நாட்டைச் சொந்த மென்றும் இருஇனத்தார்
இணங்கி வாழ்ந்திடச் செய்தல் அரிதோ அன்றாய்?

அருளுவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரிஆதி சக்தியேநின்
கருணையின்றி கணக்கில்லாக் கஷ்டமுற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தின்றுசூழ்ந்த
இருளகல வழயேதும் இல்லை யென்ற
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்தியில் கேட்டயாவும்
உவந்தளிப்பதுன் கடனாம் ஒப்பில்தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஞ்சி காமாட்சி

முத்துமணி மண்டபம் ரெத்தினச் சிம்மாசனம்
முழங்கிடும் மணி ஓசையே
முப்பெரும் சக்தியாம் திரிசூலம் ஏந்திடும்
முத்துநகை பெற்ற தாயே
பத்து விரல் சூட்டிய பவளமணி மோதிரம்
பாடக தண்டை கொலுசும்
பச்சையுடன் நீலமும் புஸ்பராகத்திலும்
பதித்திட்ட தாலி அழகும்

முத்து மூக்குத்தியும் முழுவைரக் கம்மலும்
முத்தார ஒட்டியானம்
முத்துமணி மாலையுடன் முக்தி தரும் கைகளில்
முக்கனிக் கரும்பு வில்லும்
சித்திரத்தில் என்றுமே சக்தியாய் விளங்கிடும்
தேவியவள் அருள் மாட்சியே
செந்தமிழ் பாடிடும் சிந்தையில் வாழ்ந்திடும்
தேவியுமை காமாட்சியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசி விசாலாட்சி

ஆதி சிவன் உடல்மீது பாதி உடல் பெற்றிட்ட
 ஆழகான அன்னை உமையே
ஆற்றல் சேர் சக்தியாய் அகிலத்தைக் காப்பதற்கு
 அருளாகி வந்த திருவே
வேதனைகள் தீர்க்கின்ற வேல் விழியே அருள் காட்டி
 வெற்றியினைக் காட்டுவாயே
வெங் கொடுமை தணிக்கின்ற கங்கை
 நதி ஓரத்தில் விளையாடும் அன்னை நீயே

மாதவங்கள் செய்கின்ற மாமுனிவர் பலபேர்கள்
 வாழ்கின்ற புனித காசி
மாற்றங்கள் செய்கின்ற தீர்த்தங்கள் விளையா
 மணக்கின்ற இனிய காசி
சோதனைகள் வரும்போது வேதனையை நீக்குகின்ற
 சோலையாம் விசாலாட்சியே
சொந்தமென வந்து நிதம் உன்னடியைத்
 தொழுவோர்க்குத் துணை நீயே விசாலாட்சியே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரை மீனாட்சி

மீன்கொடி பறக்கவே மேதினி சிறக்கவே
மிளிர்கின்ற மாமதுரையே
மேகநிறச் சொக்கர் மீனாட்சி கல்யாணம்
மேன்மையாய் நடக்குதங்கே
தேன் சொட்டும் சித்திரையில் திருவிழா நடக்குதே
திக்கெட்டும் மக்கள் வெள்ளம்
தெவிட்டாத மொழிபேசும் சிங்காரக் கிளியோடு
சிரிக்கின்ற தாயின் உள்ளம்
வான்மூட்டும் கோபுரம் வழிந்தோடும் வைகையும்
வையகத்தை வாழவைக்கும்
வாழ்ந்திடும் தமிழ்ச் சங்க வள்ளுவன் குரலோடு
வாழ்வினை உயரவைக்கும்
கோனாட்சி செய்கின்ற மீனாட்சி பவனிவர
கொஞ்சும் எழில் தங்க ரதமே
கோடிப்பேர் நெற்றியில் குங்குமம் ஆகியருள்
கோதை மீனாட்சி யுமையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லை சிவகாமி

ஆட்டங்கள் ஆடியே அகிலத்தை ஆண்டிடும்
ஆனந்த வல்லி நீயே
ஆழகான நாட்டிய முத்திரை நூற்றெட்டு
அமைந்திட்ட சிவகாமியே
பாட்டரங்கம் கொண்டு பாவலர் நாள்தோறும்
பாமாலை கோடிதருவார்
பாமாலை பாடியே பூமாலை பலசூடும்
பக்தர்கள் நாடி வருவார்.

கோட்டங்கள் மண்டபம் கோபுரம் நந்தியும்
கூத்தனின் புகழ் பாடுதே
கூத்தனுடன் சக்தியும் ஆடிடும் ஆட்டத்தில்
கொடுமைகள் அழிந்தோடுதே
வாட்டங்கள் போக்கிட வந்திடும் அன்னையே
வல்லியவள் சிவகாமியே
வரம்வேண்டி கரங்கூப்பும் வறியவள் வாழ்வினை
வளமாக்கும் தேவியுமையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறு பேறும் பெற

சகலசெல் வங்களும் தரும்இமய கிரிராச
 தனையமா தேவி! நின்னைச்
சத்யமாய் நித்தியமுள் ளத்தில்து திக்குமுத்
 தமருக்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்வித‌ன தானியம்
 அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
 ஆகநல் லூழ்நு கர்ச்சி

தொகைதரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
 சுகானந்த வாழ்வளிப் பாய்
சுகிர்தகுண சாலி! பரி பாலி! அனுகூலி! திரி
 சூலி! மங் களவி சாலி!
மகவுநான்: நீதாய் அளிக்கொ ணாதோ? மகிமை
 வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ காமிமகிழ்
 வாமி! அபி ராமி! உமையே

ஊன் ஆனாய் உயிர் ஆனாய் உயிரில் ஊறும் உணர்வானாய்
வான் ஆதி ஐம்பூத வகையெல்லாம் நீயானாய்
தேனாரும் மலர்க்கொன்றைச் சிவம் என்னும் பொருளானாய்
நானானாய் உயிர்க்குயிரே ஞானப்பேரொளி உமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் உனைப் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ ஜெய..

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய அம்மம்மா
தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை – ஓம் - ஜெய...

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வரமருள்வாய் அம்மம்மா
ஈசுவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய..

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ வழிகாட்டி டுவாய்
ரஷதேவியுடன் அடைக்கலமே – ஓம் ஸ்ரீ ஜெய..

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா ஓம் ஸ்ரீ ஜெய...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்க மங்களம்
இச்சையாவும் முற்றவிக்கும் சிற்சிலைக்கு மங்களம்

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும் என் வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்தலைந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க் கனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும் ஓங்க என்கரத் தியற்கையான சித்தியைத்
தந்துஞான மூர்த்தியாய்த் தனித்துவைத்த சக்தியாம்
நாமகீர்த் தனம்பரந்த நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞானதீப மேற்றியென்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்நதம்கொண் டாடுவோம்.

நம பார் வதீ பதயே
அர ஹர மகா தேவா
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் துதிப்பாடல்

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே! (அம்மா அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய்! (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா! (அம்மா அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய் துடிக்க வைக்குதம்மா! (அம்மா அம்மா)

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று! (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய்! (அம்மா அம்மா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றால் நடந்தால் உன்நினைவு
எங்கும் எதிலும் உன்காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா! (அம்மா அம்மா)

## உன் கருணை வழிய வேண்டும்

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
கண்ணிரண்டும் உன்னருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாடவேண்டும்
நவநவமாய் வடிவெடுக்கும் நாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
பண்ணமைக்கும் நாவுனையே பாடவேண்டும்.
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்.

கவலைகளைத் தீர்த்துவிடும் காமேஸ்வரி
காரிருளில் தீச்சுடரே ஜோதீஸ்வரி
நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்.
நெஞ்சினிலே திருநாமம் வழியவேண்டும்
துன்பமெல்லாம் போக்கிவிடும் துர்க்கேஸ்வரி
தொழுதகைக்கு வளமளிக்கும் ஞானேஸ்வரி
கற்றதெல்லா மேன்மேலும் பெருகவேண்டும்.
கவிதையிலே உன்நாமம் வழியவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிலே பரிமளிக்கும் பரமேஸ்வரி
பக்தர்களின் துதிசுமக்கும் கமலேஸ்வரி
சுற்றமெல்லாம் நீடுழி வாழவேண்டும்
தொல்லை இந்த வாழ்வைவிட்டு ஓடவேண்டும்.
இன்பமான அமைதிஎங்கு மோங்கவேண்டும்
இதயமெல்லாம் ஈசன்கோயி லாகவேண்டும்.
மண்வளமும் மனவளமும் பெருகவேண்டும்.
மாநிலத்தில் உன்கருணை வழியவேண்டும்

## காயத்ரி மந்திரங்கள்

(குஜதோஷம் தீர (செவ்வாய் தோஷம்)

1. ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாசேனாய தீமஹி
தன்னோ ஷண்முகஹ் ப்ரசோதயாத்
2. ஓம் புஜங்கேசாய வித்மஹே உரகேசாய தீமஹி
தன்னோ நாகஹ் ப்ரசோதயாத்
3. ஓம் கார்திகேயாய வித்மஹே வள்ளீநாதாய தீமஹி
தன்னோ ஸ்க்ந்தஹ் ப்ரசோதயாத்
4. ஓம் மஹாசேனாய வித்மஹே ஷடானனாய தீமஹி
தன்னோ ஸ்கந்தஹ் ப்ரசோதயாத்
5. ஓம் தத்புருஷாய வித்மஹே சிகித்வஜாய தீமஹி
தன்னோ ஸ்க்ந்தஹ் ப்ரசோதயாத்
6. ஓம் ஷடாணனாய வித்மஹே சக்திஹஸ்தாய தீமஹி
தன்னோ ஸ்க்ந்தஹ் ப்ரசோதயாத்
7. ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாசேனாய தீமஹி
தன்னோ ஸ்க்ந்தஹ் ப்ரசோதயாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போ(தும்) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன் தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய்.

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல் போற்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பப்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண் பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருசிற்றம்பலம்**

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மறுவா நெறி அளிக்கும் வாதவூர் என்கோன்
திருவாசகம் என்னும் தேன்

## 1. சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராஜர் பத்துப் பாடல்

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டலமிரண்டேழு நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவும் நீ யொருவ நீயே
பேதாதிபேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்த குரு நீ
புகழொணா கிரகங்கள் ஒன்பதும் நீ
யிந்த புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகளை ஈன்ற அப்பனே
என் குறைகள் யார்க்குரைப்பேன்?
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே !

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமி யாட
மாலாட நூலாட மறையாட திறையாட
மறைதந்த பிரமனாட
கோனாட வானிலகு கூட்டமெல்லாமாட
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாட தண்டை புலி யுடையாட
குழந்தை முருகேசனாட
ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி
அட்ட பாலகருமாட
நரை தும்பை அருகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட எனைநாடி இதுவேளை
விரைந்தோடி ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமலிரவு பகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபயனுமடைந்திலேனை
தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும்
தாவரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்று கேளாது
இருப்பதுனக்கழகாகுமா?
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

வம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேசம்
அதுவல்ல ஜாலமல்ல
அம்பு குண்டுகள் விலக மொழியு
மந்திரமல்லஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
அரிய மோகனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி இவரெலாம்
கூறிடும் வயித்தியமல்ல
என்மனம் உன்னடிவிட்டு விலகாது
நிலைநிற்கவே உளது கூறி வருவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே!

நொந்துவந்தே னென்று ஆயிரம் சொல்லியும்
நின்செவியில் மந்தமுண்டோ!
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ!
சந்ததமும் தஞ்சமென்றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ!
தந்திமுகன் அறுமுகன் இருபிள்ளையில்லையோ
தந்தை நீ மலடுதானோ!
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே
வினையொன்றும் அறிகிலேனே
வேதமும் சாஸ்த்ரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை இதுவல்லவோ
இந்தவுலகு ஈரேழும் ஏனளித்தாய் சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதிலும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதிலும்
மொழி எதுகை மோனையும் இல்லாமல் பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே தவறினும்
முழு காமியே ஆயினும்
பழி எனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ
பார்ப்பவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுடல் ஈந்த நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகனைக் காக்கொணாதோ
எழில் பெரிய அண்டங்கள் அடுக்காய் அமைத்த நீ
என் குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

அன்னைதந்தையர் என்னை ஈன்றதற்கழுவனோ
அறிவிலாததற்கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக்கழுவனோ
முற்பிறப்பென்ன வினை செய்தேன் என்றழுவனோ
என் மூட அறிவுக்கழுவனோ
முன்னில் என் வினைவந்து மூளும் என்றழுவனோ
முத்தி வருமென்று உணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன என்றழுவனோ
தையலார்க்கழுவனோ மெய்வளர்க்க அழுவனோ
தரித்திர தசைக்கழுவனோ
இன்னமென்னப் பிறவிவருமோ வென்றழுவனோ
எல்லாமுரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

காயாமுன் மரமீது பூ பிஞ்சறுத்தனோ
கன்னியர்கள் பழிகொண்டனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனோ
கிளைவழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக்கென்னவினை செய்தனோ
தந்தபொருளிலை யென்றனோ
தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனோ
தவசிகளை ஏசினேனோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வாணரைப் பழித்திட்டனோ
வடவுபோலே பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாத லோபி என்றே பெயரெடுத்தனோ
எல்லாமும் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவியுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியையாண்டுமென்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாய் இருந்தென்ன
சீடர்கள் இருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பயன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க உதவுமோ!
இதுவெல்லாம் சந்தை உறவென்று தான்
உந்தனிருபாதம் பிடித்தேன்
யார்மீது உன்மனமிருந்தாலுமுன் கடைக்
கண்பார்வையது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

இன்னமும் சொல்லவோ உன்மனம் கல்லோ
இரும்போ பெரும்பாறையோ
இருசெவியும் மந்தமோ கேளாது அந்தமோ
இது உனக்கழகு தானோ
என் அன்னை மோகமோ இதுஎன்ன கோபமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே உன்செய்கை தானோ
இருபிள்ளைதாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவனோ
உன்னை விட்டெங்கெங்கு சென்றாலும் விழலாவனோ
உனையடுத்துங் கெடுவனோ
ஓஹோ இது உன்குற்றம் என்குற்றம்
ஒன்றுமில்லை உற்றுப்பார் பெற்ற ஐயா
என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருள் அளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய் குரு
சந்திரன் சூரியன் இவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசி பன்னிரண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே
பனியொத்த நட்சத் திரங்களிரு பத்தேழும்
பக்குவப் படுத்திப் பின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டிப்
பலரையும் அதட்டி
என்முன் கனிபோலவே பேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களையும் கசக்கி
கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்ப னாக்கி
சிறுமணவை முனுசாமி பாடியவை இசைக்கும்
எமை அருள்வது இனி யுன்கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்முக கவசம்

அண்டமாய் அவனியாகிஅறியொணாப் பொருளது ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என் அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாது அவிழ் கடப்பந் தாரான் தானிறு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசு இலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க

இரு செவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசு அறு கதுப்பை யானைத்துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச்சிவ சுப்பிரமணியன் காக்க

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசுஇலா மார்பை ஈர ஆயுதன் காக்க எந்தன்
ஏசுஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக் கோன் காக்க

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத்தலத்தை மாமுருகன் காக்க
புறம் கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன் காக்க பின் முதுகைச் சேய் காக்க

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க வம்புத்
தோள் நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க, பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண்நேர ஆசான் திமிருமுன் தொடையைக் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரகத் தேவன் என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த் தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க

ஐயுறு மலையன் பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன் அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க

ஓலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப் பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிரிகொள் எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணியில் வேல் சூலங்களும்
தாங்கிய தண்டம் எ.்.கம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க

ஔவியமுளர் ஊன் உண்போர் அசடர்பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவாராயின் சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கை அயில் காக்க காக்க

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனாலேனும் நான் இடர்ப்பட்டிடாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளை வேல் காக்க

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால் எற்கு ஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலத்தில் உய்வன் மீன்ஏறு தண்டுடைத் திருக்கை மற்று
நிலத்திலும் சலத்திலும் தான் நெடிந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால் நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க

ஞமலியம் பரியன் கைவேல் நவக்கிரககக் கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த சூலை, ஆக்கிராண ரோகம்
திமிர்கழல் வாதம், சோகை சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிரு புயன் சயவேல் காக்க

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி கண்ட மாலை
குமுறு விப்புருதி குன்மம் குடல்வரி ஈழை, காசம்
நிமிரொணா(து) இருத்தும் வெட்டை நீர்ப் பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண்முளை தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சத்திவடி வேல் காக்க

தவனமா ரோகம் வாதம் சயித்தியம் அரோசகம்
சுவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு, உடற்று விக்கல்
அவதி செய் பேதி, சீழ்நோய் அண்டவாதங்கள் சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல்தொழு நோய்க்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப் பகந்த(ர) ஆதி
இமைப் பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரி செய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்து அருள்ஆர் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல் முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்வின் காக்க
சக்ரமோடு ஆறும் ஆனோன் தன் கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவமோலி திகழைவேல் கீழ்மேல் காக்க

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர் காமத்தோன் இகலுடைக் கரவேல் காக்க

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழ் எனை நிருதி திக்கில் நிலைபெறாக் காக்க மேற்கில்
இகல் அயில் காக்க வாயு வினில் குகன் கதிர்வேல் காக்க

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும் ஞான்றும் நவில் கையில் நிமிர்கையில் கீழ்க்
கிடக்கையில் தூங்கும் ஞான்றும் கிரிதுளைத்துளை வேல் காக்க

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்
வழங்கும் நல்ஊன் உண்போதும் மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும் குணத்தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன் எல், ஓம் சிவசாமி காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிநடு பிற்பகல்கால் சிவகுரு நாதன் காக்க

இறகுடைக் கோழித் தோகைக்கு இறை முன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே திகழ் பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழ குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க

இனம் எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அனுபூதி சொன்ன நாதர் கோன் காக்க, இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள் தான் காக்க வந்தே.

## கந்தசஷ்டி கவசம்

### குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குக் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

### காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

**நூல்**

**திருப்பரங்குன்றம்**

திருப்பருங்குன்றுரை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத்துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப்பொருளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையாபுரியில் மகிழ்ந்து வாழ்பவனே
ஓய்யார மயில் மீது உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழநியங்கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலிமலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசங் காரா துரையே நமோ நமோ
வீரவேலேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீராறுடை கந்தா நமோ நமோ
கோழிக்கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம்ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருக நிஷ்களங்கனே வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயென நின்னிருதாள் பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்லவிடங்கள் வாராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞானகுரு உனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
என்னிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமிநாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர்காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே ...
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தன் அரி அயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரைமாக் கலைகளும்
தானே நானென்று சண்முகமாகத்
தாரணியுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத்துள்ள புண்ய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய் போலெழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள்வாயே
செந்தில்நகர் உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே ...
சரணம் சரணம் சரஹணபவ ஓம்
அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரஹணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 திருச்செந்தூர்த் தேவசேனாபதி

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குக் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரஹணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக்காக்கவென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திரவடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக ...
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஹணபவனார் சடுதியில் வருக ...
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும் ...
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுங் சௌவும் கிளரொளியையும்
நிலை பெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பண்ணிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்ப ழகுடைய திருவயி றுந்தியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நல் சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ ...
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன்றிருவடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக்காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங்கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப்பேய்கள்
அல்லல்படுத்தும் அடங்காமுனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கருதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டா ளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்குசெக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்றுபற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளுப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலையங் சயங்குன்மம் சொக்குச் சிறங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பல்குத்து அரணை பருஅரை ஆப்பும்
எல்லாப்பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹணபவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமாராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன்குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரிவாழ் சண்முகத் தரசே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்கவாழ்க மயிலோன் வாழ்க
வாழ்கவாழ்க வடிவேல் வாழ்க
வாழ்கவாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்கவாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்கவாழ்க வாரணத் துவஜம்
வாழ்கவாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனைகுறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிகவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவதுமாகிக்
கந்தர் சஷ்டிக்கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியால்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அட்டலட்சு மிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ்கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்கோ ரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் ...

## 3 திருவாவினன்குடி தெண்டபாணி

திருவாவினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் (கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத்திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத்துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூர சங்காரா துஷ்ட நிஷ்டூரா
கயிலாய மேவும் கனக சிம்மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திய மாமுனிக் (கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முறுகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவருணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத்தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம் சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடும்சிறை வைத்தே
உருபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம்சொல்லியது ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ (து) அமர்ந்த (து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய (து) ஒருமுகம்
தெள்ளுநான்முகன் போல் சிருட்டிப்ப (து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த (து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ (து) ஒருமுகம்
ஞானமுதல்வருக்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட் செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன்குடியாய் நமோநம
சர்வ சங்கரிக்குத் தனயா நமோநம
உறுசோலைமலைமேல் உகந்தாய் நமோநம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக்கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத்துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந்தருளி
உல்லாசத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சாலமுக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலாயுதமுடன் விளங்கும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவாகாசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கையீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய் அறுகோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரைதன்மேல்
ஆகாச வட்டத் (து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல்கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக்கட்டி
அக்கினி குதிரை ஆகாசத்தேவி
மிக்கமாய்க் கருநெல்லிவெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழியாவர்
சாகாவகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கற்பமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்திரனைக்கண் (டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவ என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன் விளையாடி
மேலைக்கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக்குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில்பிரியா வங்கண மாக
நினைத்தபடிஎன் நெஞ்சத்திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க் (கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்து ஆறு முகமும்
மாறாதிருக்கும் வடிவையும் காட்டி
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னே வந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிரபந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங்காரம்
வாழ்த்தும் என் நாவில்வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கு வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்குதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன் பாதமும் நாடியபொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளிச்
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவேவந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடை பூதமும்
வேதாளம் கூளிவிடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுங்க
பதைபதைத்தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித் (து) அங்கு உருட்டி நொறுக்கிச்
சூலத்தால் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப்பருகி
மழுவிட்டேவி வடவாக்கினி போல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீரபத்திரன் சக்கரம்
திருவைகுண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன் என் மனத்தில் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவும் உச் சாடனம்
வம்பதாம் பேதானம் வலிதரு (ம்) மாரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடனம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே செபித்துக்
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்குரு சங்காரா
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 திருவேரகம் ... சுவாமிமலைக் குருநாதன்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கா ரமாக உதயத் தெழுந்தே
ஆங்கா ரமான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான் மருகோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆணவம் நண்ணிடா (து) என்னை
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் புதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
... ஏகாட்சரமாய் ... எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதல் பொருளே
... துவியட் சரத்தால் ... தொல்லுல (கு) எல்லாம்
அதிசயமாக அமைத்தவா போற்றி
... திரியட் சரத்தால் ... சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற் றவனே
... சதுரட் சரத்தால் ... சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
... பஞ்சாட் சரத்தால் ... பரமன் உருவதாய்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத் (து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைந் (து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தாய்
சீர்த் திருச் செந்தூர்த் தேவசே னாபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசங் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாகத்
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க் (கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ (டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் செய்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரொ (டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடை நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுடன் கடனே செந்தில் நாயகனே
தெய்வநா யகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 குன்றுதோறாடும் குமரன்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமர குருபரா
வள்ளிதெய் வானை மருவிய நாயகா
துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியனு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முகநதியும் சராபன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழனிக்கு இறைவா
ஆறாறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணதீறணி திருநுதல் அழகும்
கருணைபொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்து கனமார் (பு) அணைத்தே
ஐயா ... குமரா ... அப்பனே ... என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா ... வருகவென் (று)
அந்நேரம் வட்டமிட்டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவியவே லேந்தும் இறைவா வருக
கூவிய சேவல் கொடியோய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகில் சிவனொளி அய்யனே வருக
கலபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலில்சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திரவாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபை போல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கஸ்தூரியும்
வலம்புரி சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமணி பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணைபொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேல்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழைபங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்துகொண் டாடத்
தானவர் அடியர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்ய
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பைரவர் ஆனந்தமாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ட லஷ்மி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவல் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தர்வர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன்மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீரமயி லேறி வெற்றிவேல் எடுத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலறக் குலத்தை அறுத்துச் சயித்து
விடுத்தவே லாயுதம் வீசிக்கொக் கரித்துத்
தம்ப மெனும் சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்பதி செந்தூர்
திருவாவி நன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலிமலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க ...
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக் (கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 பழமுதிர்சோலை பரமகுரு

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநி மாமலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவணபவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவல்கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவணபவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்ச மென்றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங் (கு)
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீரவாகுவோ (டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்க
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேக மதாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து
அயனைச் சிறைவிடென் (று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே ...
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைம களுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெரும ...
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவேரக முதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென் (று) ஓதினார் சமயம் அறிந்தங் (கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழனி தேவ குமாரா
கண்பார்த் (து) எனையாள் கார்த்திகே யாஎன்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட் சுமிவாழ் அருளெனக் குதவி
இட்டமாய் என்முன் இருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருணகிரி தனக் (கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த் திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் தமிழ் தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை மயில் வாகனனே

பச்சை மயில் வாகனனே
சிவ பால சுப்ரமண்யனே வா
என் இச்சையெல்லாம் உன் மேலே
வைத்தேன் எள்ளளவும் பயமில்லையே
அலைகடல் ஓரத்திலே
எங்கள் அன்பான சண்முகனே
அலையா மனம் தந்தாய்
உனக்கு ஆனந்த கோடி நமஸ்காரம்
கொச்சை மொழியானாலும்
உன்னை கொஞ்சி கொஞ்சி பாடிடுவேன்
இங்கு சர்ச்சை எல்லாம் மறைந்ததப்பா
எங்கும் சாந்தி நிலவுதப்பா
வெள்ளம் அதன் பள்ளம்தனிலே
பாயும் தன்மைபோல் உள்ளந்தனிலே
நீ மெல்ல மெல்ல புகுந்து வீட்டாய்
எங்கள் கள்ளமெல்லாம் கரைந்ததப்பா
நெஞ்சமதில் கோவில் அமைத்தேன்
அதில் நேர்மையெனும் தீபம் வைத்தேன்
செஞ்சிலம்பு கொஞ்சும் வேலா
முருகா சேவல் கொடி மயில் வீரா
செந்தூர் கடலோரம்
முருகா சிங்கார மயில்வாகனா
செந்தூர பொட்டழகா
உந்தன் சேவடியில் நான் சரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகா! சரணம்

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

அன்பர்கள் நேயா! அம்பிகை புதல்வா!
துன்ப மகற்றிடும் சீலா! பாலா!

அன்பர்கள் நேயா! அம்பிகை புதல்வா!
துன்ப மகற்றிடும் சீலா! பாலா!

சிவகுமாரா, முருகா வருக!
சிவகுமாரா, முருகா வருக!

பரம புருஷா வரந்தர வருக!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

கலங்கா தெனையே காத்திடு முருகா!
மலந்தா னுகா வரந்தா முருகா!

கலங்கா தெனையே காத்திடு முருகா!
மலந்தா னுகா வரந்தா முருகா!

காவாய் முருகா!, கார்த்திகை குமரா!
காவாய் முருகா!, கார்த்திகை குமரா!
வா! வா! முருகா வினை தீர்த்திடவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

யோகா முருகா பகை மாற்றிடவே
பொன்னடிப் போற்றிப் பணிந்திடவே யான்

யோகா முருகா பகை மாற்றிடவே
பொன்னடிப் போற்றிப் பணிந்திடவே யான்

சென்னியில் உன்னடி ஓங்கிடவே
சென்னியில் உன்னடி ஓங்கிடவே
தேடிய நலன்கள் செறிந்திடவே.... முருகா!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

பாடிய புகழ்கள் மலிந்திடவே முருகா!
கூடிடும் அன்பர் கும்பிடவே

பாடிய புகழ்கள் மலிந்திடவே முருகா!
கூடிடும் அன்பர் கும்பிடவே

அன்பாய் அவர்தாள் சூடிடவே!
அன்பாய் அவர்தாள் சூடிடவே!
சூடிடவே யான் சூடிடவே!
சூடிடவே யான் சூடிடவே!

அன்பாய் அவர்தாள் சூடிவே!
அன்பாய் அவர்தாள் சூடிவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

முருகா! சரணம் முருகா! முருகா!
முருகா! சரணம் முருகா! முருகா!

முருகா!...முருகா!...முருகா!...முருகா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோளற்று திருப்பதிகம்

### பண் – பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
ளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

### பிரம்மனை தனது கர்ஜனையால் கீழே விழ வைத்த நரசிம்ம பெருமாள்

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் கலையதூர்த்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

**விரைவாக திருமணம் ஆக வாஸ்து சாஸ்திரம் கூறும் ஆலோசனைகள்**

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையாக வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொள்ஆலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரம்மா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்றுப் பதிகம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே... (1)

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே... (2)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே... (3)

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே... (4)

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே... (5)

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே... (6)

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே... (7)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே... (8)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே... (9)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே... (10)

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே... (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமசிவாய பதிகம்

## சொற்றுணை வேதியன்

### (திருநாவுக்கரசர் அருளியது)

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினனுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கைலாயம்

## திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறை உறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணலங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி யெழுந்தருளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 5

பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார் அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 6

அது பழச்சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங் கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள்ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெருமான்பள்ளி யெழுந்தருளாயே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின்னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே. 9

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தருளாயே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்கெளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதோஷப் பாடல்கள்

## நந்திஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிப்பட்டால்
புந்தியில் ஞானம் சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழ உண்டு!
அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாட உண்டு!
முற்பிறவி வினைகள்யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலங்கள்உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோமே!

## நலந்தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் கவனமாய்ச் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்

ஒன்பது கோள்களுக்கும் உயரிய பலன் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்
சிந்தனை வளங்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந்தெம்மைக் காப்பாய்

மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்க வைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையின் வண்ணப்பூவைச் சூடிடும் நந்தி தேவா
நாளும் நான் உனைத் துதித்தேன் நாடி வந்தெம்மைக்காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல் வெண்ணை சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாம் உனையடைந்தேன் தயங்காது எம்மைக் காப்பாய்

## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கைலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினைஎந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிட விளையும் நந்தி

வேந்தன் நகர் செய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதோஷ காலத்தில் ஓதும் தேவரங்கள்

"நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கும் மத்தாகப்
பாகந்தேவ ரொடசுரர் படுகடலின் யெமக் கடைய
வேகநஞ்செழவாங்கே வெருவொடுமிரீந் தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்தமாக்கு வித்தான்" மறைக்காடே

-திருஞான சம்பந்தர்-

பருவரை ஒன்று சுற்றி அரவங்கைவிட்ட
இமையோ ரிரிந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்து விசை போய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பிதிகாரமொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவ்வணண்ட ரண்டர் அரசே

-திருநாவுக்கரசு நாயனார்

கோல் வரை மத்தென நாட்டிக்
கோரளவு சுற்றிக் கடைதெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிக விரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்தே பித்த நீ செய்த
சீலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே'

-சுந்தரர்

கோலால மாகிக் குரைகடல் வாயன் றெழுந்த
ஆலால முண்டா னவன் சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனேல் அயன்மா லுள்ளிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ"

- மாணிக்கவாசகர்

இனியோ நாமுய்ந்தோம் இறைவன் தாள்சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக் கடலை யாக்குவிக்கு மீளாய்ப் பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்.

- காரைக்கால் அம்மையார்

அடியவராம் இமையவர்தம் கூட்ட முய்ய
அயலகடல் வாய் நஞ்சுண்ட அமுதே, செங்கண்
நெடியானும் நான் முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இதரி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்க்வாசக்
கடியாரும் மலர் சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே! காவாய் என்றும்

- பெரியபுராணம்

## ஈஸ்வர தியானம்

ஓம் நம: ஸிவாய பரமேஸ்வராய
சசி சேகராய நம ஓம்
பவாய குண ஸம்பவாய
சிவ தாண்டவாய நம, ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (01)

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (02)

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (03)

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (04)

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (05)

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (06)

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (07)

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (08)

## பிரதோஷப் பாடல்

### மங்கள ரூபினி என்கிற மெட்டில் பாடவும்

மங்களம் தந்திடும் பரமனின் திருவடி
நம்மனம் தன்னில் இருத்தியே துதிப்போம்
சந்தியா காலத்து பிரதோஷ நாயகன்
கங்கன பிரியன் சிவநம சிவயன்
கிள்ளை கரமதில் பிடித்திடும் இமையுடன்
பிள்ளையை ஒருசேர பணிந்திடும் அடியர்க்கு
தில்லையில் நடித்திடும் திருமறை இறையவன்
இல்லையென் ட்ரோதே திருவருள் தருவான்

ஆடிடும் பாதம் தேடிடும் கண்கள்
நாடிடும் மனமோ கூடிடும் இசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிடும் வாழ்வில் சேர்ந்திடும் வளங்கள்
பாடிடும் சூடிடும் பரமனை நெஞ்சம்

ஹரஹர சிவசிவ தாண்டவ சங்கர
புரஹர நமசிவ குண்டலங்களை
நரஹர நடனம னோஹர ரஞ்சித
கரஹர திகபர ஆண்டவா வல்லபா

தும்புரு நாரதர் தம்புரு மீட்டி
இன்புற பாடிய தீநிற அண்ணலே
துன்புறம் வாழ்வில் நிம்மதி தந்திடும்
அன்புடை கோவே அருள்வாய் சிவனே

தாம்ததிம் தகயென ஆடிடும் நாதா
சாம்பச தாசிவ சத்குரு தேவா
பாம்பினை அணிந்திடும் முக்கண்ணா ஏ
காந்தம் விரும்பிடும் நாதஸ்வ ரூபா

நந்தியின் மீதே எழுந்தாய் போற்றி
சந்தியா நேர இறைவனே போற்றி
சிந்தியில் நிறைத்தாய் தேவா போற்றி
எந்தையும் தாயும் ஆனாய் போற்றி

வளியிடை நிறைந்தாய் பித்தா போற்றி
வெளியினில் நிறைந்தாய் சித்தனே போற்றி
தெளிந்திட மனத்தினில் நிறைவாய் நிற்பாய்
களித்து நடித்திடும் ஆண்டவா போற்றி .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தொண்டர்தொகை

சுந்தரமூர்த்திநாயனார்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்,
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்,
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்,
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்,
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்,
விரிபொழில்சூழ் குன்றையார் விறல்மிண்டற்கு அடியேன்,
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற்கு அடியேன்,
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்,
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கு அடியேன்,
கடவூரில் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்,
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்,
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்,
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்,
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்,
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்,
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்,
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையான் அடிசண்டிப் பெருமானுக்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன்றன் அடியார்க்கும் அடியேன்,
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்,
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்,
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்,
ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்,
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலார் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்,
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்,
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்,
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்,
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்,
சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்,
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற்கு அடியேன்,
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்,
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்,
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்,
மெய்யடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்,
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன்,
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்,
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்.
நிறை கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்,
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்,
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்,
மடல்சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்,
புடைசூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்,
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்,
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்,
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்,
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்,
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்,
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்,
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற்கு அடியேன்,
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்,
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பரா வாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெட்சணாமூர்த்தி துதி

வேதநூல் தர்ம சாஸ்திரம்
மேன்மையை அறிந்தோனாகி
சாதனையால் கற்பகத்
தனிநாட்டின் இறைவன் ஆகி
சோதியாய் குருவுமாகி
சொர்க்கத்தை மண்ணில் நல்கும்
ஆதியாம் குருவே நின்தாள்
அடைக்கலம் போற்றி போற்றி

கல்லாலின் புடையமர்ந்த
கருணைமிகு கண்ணாளனே
சொல்லாடிய நல்வர்மனக்
குறையகல வல்லானே
எல்லாநிலையும் எடுத்தியம்பி
சொல்லா நிலைக்காட்டி
கல்லாக்கலை ஞானத்தை கருத்துள்
கனிவித்த குருவே போற்றி.

மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க்கரசன் மந்திரி
நயைசொரி கற்பகம் பொன்
நாட்டினுக்கு அதிபனாகி
நிறைதனம் சிவிகை மண்ணில்
நீடு போகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன்
இருமலர் பாதம் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மை பணிய உம்மை தரவேண்டும்
குருவைப் பணியக் குணந் தர வேண்டும்
பார்த்தாவை பணிய பதுமை தரவேண்டும்
அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர்
சேக்கிள நாயனார் சித்தாங்கமாகிய
மூத்த முதலாகிய சிகவர் விளங்க
வந்த தெஹணாமுர்த்தியே
செம்மையானந்த குருவே.

### தெக்ஷ்ணாமூர்த்தி வழிபாடு

ஓம் தென்திசை நோக்கியிருப்பவனே போற்றி
ஓம் தேசப்பளிங்கின் திரனே போற்றி
ஓம் மன்னிய திருவருள்மலையே போற்றி
ஓம் சென்னையில் வைத்த சேவகா போற்றி
ஓம் என்னையு மொருவனாக்கி யிருகழற் போற்றி
ஓம் முழுவது மறிந்த முதல்வா போற்றி
ஓம் சீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
ஓம் தீயமை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
ஓம் இன்றெனக் காரமுது ஆனாய் போற்றி
ஓம் கன்னாகுரித்த கனியே போற்றி
ஓம் காவாய் என்றனக்கு அருள்வாய் போற்றி
ஓம் இடரினைக் களையும் எந்தாய் போற்றி
ஓம் அரசே போற்றி
ஓம் அமுதே போற்றி
ஓம் அற்புதா போற்றி
ஓம் அருந்தவா போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அறிவே போற்றி
ஓம் ஆதி போற்றி
ஓம் ஆண்டவா போற்றி
ஓம் இன்பா போற்றி
ஓம் இறைவா போற்றி
ஓம் ஈசா போற்றி
ஓம் உடையாய் போற்றி
ஓம் உணர்வே போற்றி
ஓம் உயிரே போற்றி
ஓம் எழுத்தே போற்றி
ஓம் ஐயா போற்றி
ஓம் சுடரே போற்றி
ஓம் நெறியே போற்றி
ஓம் நினைவே போற்றி
ஓம் வேதியா போற்றி
ஓம் விமலா போற்றி
ஓம் வானோர்க்கு அறிய மருந்தே போற்றி
ஓம் விரிகடல் உலகின் வினைவே போற்றி
ஓம் அழிவது மாவதும் கடந்தாய் போற்றி
ஓம் அருமையில் எளிய அழகே போற்றி
ஓம் அருமுகிலாகிய கண்ணே போற்றி
ஓம் கருணையே இருக்கை ஆக்கினாய் போற்றி
ஓம் கண்டத்தில் நஞ்சை வைத்தாய் போற்றி
ஓம் கனவிலும் கண்ணாமுதக் கடலே போற்றி
ஓம் அண்ணாமலையெம் அண்ணா போற்றி
ஓம் குற்றாலத் தெங்கூத்தா போற்றி
ஓம் கோகழி மேவிய கோவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கடம்பூர் மேவிய கடம்பா போற்றி
ஓம் பராய்த்துறை மேவிய பரனே போற்றி
ஓம் பாகம் ஒரு பெண் ஆனாய் போற்றி
ஓம் சிராப்பள்ளி சிவனே போற்றி
ஓம் தாயாகி வந்தமர்ந்தா போற்றி
ஓம் மருத்துவம் பார்த்தமருந்தே போற்றி
ஓம் மகிமையுனக்கே யுகந்தாய் போற்றி
ஓம் மயான துர்க்காவாய் ஆனாய் போற்றி
ஓம் மயிலையின் மஞ்சமும் நீயானாய் போற்றி
ஓம் மக்கள் குறைகளை களைவாய் போற்றி
ஓம் மந்திரமும் தந்திரமும் நீயே போற்றி
ஓம் மங்கையைச் சடையில் வைத்தாய் போற்றி
ஓம் சந்திரனையும் ஆட்கொண்டாய் போற்றி
ஓம் சந்தான பாக்கியம் அருள்வாய் போற்றி
ஓம் மண்சுமந்து மன்னன் அடிபெற்றாய் போற்றி
ஓம் அகார உகார மகாரம் ஆனாய் போற்றி
ஓம் பரம்பரஞ்சோதிபரனே போற்றி
ஓம் பரகதி பாண்டியர்க்கு அருளினாய் போற்றி
ஓம் ஆராவமுதே அருளே போற்றி
ஓம் பேராயிரமுடைய பெம்மான் போற்றி
ஓம் ஓராயிரம்பேர் உனக்கே போற்றி
ஓம் கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
ஓம் குவைப்பதிமலிந்த கோவே போற்றி
ஓம் திருக்கழுக் குன்றச் செல்வா போற்றி
ஓம் பொறுப்பவர் பூவணத்தானே போற்றி
ஓம் தெறவரிதாகிய தெளிவே போற்றி
ஓம் தோளாமுக்கம் சுடரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கருங்குருவிக்கன்று அருளினை போற்றி
ஓம் காலனை வென்ற கங்காளனே போற்றி
ஓம் காராம் பசும்பாலைக் கரந்தனை போற்றி
ஓம் கற்பக மரத்தடி அமர்ந்தனை போற்றி
ஓம் வேராகி விண்ணனாகி நின்றாய் போற்றி
ஓம் மீளாத யென்னை ஆட்கொண்டாய் போற்றி
ஓம் ஊற்றாகி உள்ளே ஒளிந்தாய் போற்றி
ஓம் ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஓம் ஆற்றாராகியங்கே அமர்ந்தோய் போற்றி
ஓம் ஆரங்க நால்வேதமானாய் போற்றி
ஓம் காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
ஓம் கயிலை மலையானே போற்றி
ஓம் பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
ஓம் பிறவி அறுக்கும் பிரானே போற்றி
ஓம் வைச்சாடனன்று முகந்தாய் போற்றி
ஓம் மறுவிஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஓம் உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
ஓம் உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
ஓம் திருவாகி நின்ற திறமே போற்றி
ஓம் தேச பேரவப்படு வாய் போற்றி
ஓம் ஊராகி நின்ற உலகே போற்றி
ஓம் ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
ஓம் தேத்தை வார்த்த தெளிவே போற்றி
ஓம் பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
ஓம் பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
ஓம் எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
ஓம் என் சிந்தை நீங்காத இறைவா போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி

ஓம் கதிர்ஒளிச்சுடர் காட்சி அளித்தாய் போற்றி

ஓம் கல்லுயுராகி நின்ற கனலே போற்றி

ஓம் கானத்தை மெச்சி ஆடினாய் போற்றி

ஓம் ஊழி ஏழான ஒருவா போற்றி

ஓம் ஓங்காரத்தின் பொருளை உகந்தனை போற்றி

ஓம் ஆதி புராணனாய் நின்றாய் போற்றி

ஓம் யாவருக்கும் மேலாகி நின்றாய் போற்றி

ஓம் நெடிய விசும்பொரு கண்ணே போற்றி

ஓம் தென்னாடுடைய சிவனே போற்றி

ஓம் என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி.

## நவக்கிரகதுதி

### சூரிய பகவான்

**ஓம் அம் ஆதித்யாய நம:**

காசினியிருளை நீங்குங் கதிரொளி யாகியெங்கும்
பூசனையுலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தைநல்கும்
வாசியேழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய்வந்த
தேசிகாவெனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி

### சந்திர பகவான்

**ஓம் சம் ஸோமாய நம:**

அலைகட லதனின்று அன்றுவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்
சிலைநுத லுமையாள்பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்காரக பகவான்

**ஓம் கும் அங்காரகாய நம:**

வசனநற் தைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை
நிசமுட னவரவர்க்கும் நீணில தனிலளிக்குங்
குசனில மகனாஞ்செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி

## புதன் பகவான்

**ஓம் பும் புதாய நம:**

மதனநூல் முதலாநான்கு மறைபுகழ் கல்விஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்ஞைகளருள் வோன்திங்கள்
சுதன்பலசு பாபங்கள் சுகம்பல கொடுக்கவல்லான்
புதன்கவிப் புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி

## குரு பகவான்

**ஓம் குங் குருதேவாய நம:**

மறைமிகு கலை நூல்வல்லோன் வானவர்க் கரசன்மந்திரி
நறைசொறி கற்பகப்பொன் னாட்டினுக்கதிபனாகி
நிறைதனஞ் சிவிகைமண்ணி னீடுபோகத்தை நல்கு
இறையவன் குருவியாழன் இருமலர்ப் பாதம் போற்றி

## சுக்கிர பகவான்

**ஓம் சும் சுக்கிரதேவாய நம:**

மூர்க்கவான் சூரன்வாணன் முதலினோர் குருவாய்வையங்
கார்க்கவான் மழைபெய்விக்குங் கலிமகன் ககனமீய்வோன்
தீர்க்கவான் வானவர்கள் போற்றச் செத்தவர்தமையெழுப்பும்
பார்க்கவான் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி பகவான்

**ஓம் சங் சனிதேவாய நம:**

முனிவர்க டேவரேழு மூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமையதல்லா துண்டோ
கனிவுளதெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனிபகவானே யுனைத்துதிப்பேன் தமியனேற் கருள்வெய்வாயயெ

## இராகு பகவான்

**ஓம் ரம் இராகுதேவாய நம:**

வாகுசேர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதமீயப்
போகுமக்காலை யுன்றன் புணர்ப்பினாற் சிரமேயற்றுப்
பாகுசேர் மொழியாள்பய்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற
ராகுவேயுனைத்து திப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே

## கேது பகவான்

**ஓம் உம் கேது தேவாய நம:**

மாதுசேர்நெடுமால் முன்னால் மாகிரி வலமேபோந்து
நீதிநெறி நடுவகுத்து நிறைதனந்தந் தையம்தீர்க்கும்
மாதுசேய் கதிர்விழுங்கும் சிவன்கையில் சிறமேபெற்ற
கேதுவே யுனைதுதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் மிகு வைரவர்
## அர்ச்சனை மாலை
## வைரவர் புராணம்
## தியானம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

**அர்ச்சனை**

பிரமன்றன் சிரமரிந்த பெருமாளே போற்றி
இரப்பதற் கொருதலையை உடையானே போற்றி
கணங்களொரு வாகனமா யுடையானே போற்றி
அணங்காகக் காளியை உடையானே போற்றி
அமலனுக்கொரு மைந்தனாய் வந்தவரே போற்றி
இமவான்றன் புத்திரியின் புத்திரனே போற்றி
கையொன்றில் திரிசூலம் உடையவரே போற்றி
மையொழுகு கண்ணிக்கு மகனாரே போற்றி
அம்மை சிவகாமி பாலனே போற்றி
இம்மையிலே எல்லாந் தந்தவனே

அடியவருக் கெளிமையாய் வந்தவனே போற்றி
முடியுடைய வேந்தருக்கும் முதல்வனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியிலே பாபங்கள் அறுப்பாய் போற்றி
மிடியுடையார் மிடியினை மடிப்பவனே போற்றி
கந்தனுக்கு முன்வந்த கருணாமூர்த்தியே போற்றி
எந்தனுக்கு அருள்புரிய வந்தவரே போற்றி
கணபதிக்குப் பின்வந்த கபாலியே போற்றி
கணப்போதில் வினைகளைச் சாடிடுவாய் போற்றி
காசினியோர் தொழுதிருந்த கடவுளே போற்றி
பேசினிய பெருமானே பெரியானே போற்றி

தரணியி லுயிர்வாழ வந்தவரே போற்றி
நாரணர்க்கும் நான்முகர்க்கும் நாயகனே போற்றி
ஆரணங்க ளறியாத ஐயனே போற்றி
மாரனை வென்றெடுத்த மதியனே போற்றி
அகண்டபரி பூரணனாம் ஐயனாரே போற்றி
மகரிஷிகள் போற்றுகின்ற மாமணியே போற்றி
அம்மை சிவகாமி பாலகனே போற்றி
மும்மைக்கும் முதலாக உள்ளோனே போற்றி
ஆதிஅந்தம் இல்லா தவரே போற்றி
பாதிமதி வேணியன் மகனே போற்றி

அண்டமெல்லாங் கடந்த அருட்சுடரே போற்றி
மண்டினி ஞாலத்தை மகிழ்விப்பவரே போற்றி
சிவமூர்த்த மாக நிற்பவரே போற்றி
பவவினைகள் எல்லாம் ஒழிப்பவரே போற்றி
பைரவர்கள் வணங்கும் பகவானே போற்றி
வைரவர் என்னும் பெயருடையோய் போற்றி
வடுகாய நம என்று வணங்கிடுவோம் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுகாட்டில் நடமாடும் சூலபாணியே போற்றி
பைரவ புவனத்தில் இருப்பவரே போற்றி
பாதாள ஞான வைரவரே போற்றி

தோற்றத்தில் நீலநிறம் உடையவரே போற்றி
ஆற்றலிலும் அம்மானை வென்றவரே போற்றி
திருவடியில் சிலம்பினை அணிந்தவரே போற்றி
அருள்மறைகள் ஆறங்கம் அணிந்தவரே போற்றி
மார்பிலே தலைமாலை உடையவரே போற்றி
கார்போன்ற நிறத்தை உடையவரே போற்றி
மழுவென்னும் ஆயுதம் உடையவரே போற்றி
அழுதார்க்கு அருள்புரியும் ஆண்டவரே போற்றி
பாசமெனுங் கயிற்றை உடையவரே போற்றி
பாச வேரறுக்கும் பகவானே போற்றி

உடுக்கையை ஏந்தி ஒலிப்பவரே போற்றி
முக்கண்கள் உடைய முதல்வனே போற்றி
கடுக்கை மாலை பூண்டவரே போற்றி
எக்காலமு மெமைக் காப்பவரே போற்றி
பயங்கரத் தோற்றம் உடையவரே போற்றி
வியத்தக்க அற்புதங்கள் செய்தவரே போற்றி
கோரப் பற்களினை உடையவரே போற்றி
வீரவேல் முருகனுக்குத் தமையனாரே போற்றி
செஞ்சடையை உடைய சேவகனே போற்றி
நஞ்சணி கண்டனின் நன்மகனே போற்றி

சீற்றநகை கொண்ட முகமுடையோய் போற்றி
ஏற்றமெல்லாம் எமக்களிக்கும் நாயகனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தை அடக்கிய ஆண்டவனே போற்றி
நாணத்தை நமக்களித்த நாயகனே போற்றி
முனிவர்களின் செருக்கை அழித்தவனே போற்றி
நனிபெரிதும் ஞானத்தை அளித்தவனே போற்றி
தேவர்களின் அகங்காரம் அழித்தவனே போற்றி
பாவவினை பற்றறுக்கும் பகவானே போற்றி
ஊழிக்காலத்தில் உலகினை அழிப்பவரே போற்றி
ஆழியிலும் எம்மை அணைப்பவரே போற்றி

நான்மறையே நாய்வடிவாய் ஆனவரே போற்றி
கான்முளையாம் எம்மைக் காத்தருள்வாய் போற்றி
அறுவகைச் சமயத்தின் பைரவரே போற்றி
நறுமலர் மாலையை அணிபவரே போற்றி
வடைமாலை தன்னை விரும்புபவரே போற்றி
நடைபாதை தன்னையும் நயந்தவரே போற்றி
புளியடியும் புங்கடியும் இருப்பவரே போற்றி
தெளிவுடையார் உள்ளத்து இருப்பவரே போற்றி
அரசடியும் ஆலடியும் அமர்பவரே போற்றி
பரஞானம் தந்தருளும் பரமனே போற்றி

காவலுக்கு ஒருதெய்வம் ஆனவரே போற்றி
ஏவலுக்கு மியைந்துஎமைக் காத்தவரே போற்றி
க்ஷேத்திர பாலகர் ஆனவரே போற்றி
ஏத்திஎழு வார்க்கன்ப ரானவரே போற்றி
பெருந்தொந்தி உடைய பெம்மானே போற்றி
அருமறைகள் ஓலமிடும் ஆண்டகையே போற்றி
உருண்ட கண்கள் உடையவரே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருண்ட மனத்தை மலர்விப்பவரே போற்றி
ஆடை யெதுவுமற்ற பெருமானே போற்றி
ஓடை யிலே ஊறிவரும் அருஞ்சுனையே போற்றி ஓடைய 90

அரவ அணிகலன்கள் அணிந்தவரே போற்றி
பரவ இனியவரே பகவானே போற்றி
எண்ணெய் மூர்த்தங்கள் இசைந்தவரே போற்றி
மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்தவரே போற்றி
அசிதாங்க பைரவர் ஆனவரே போற்றி
பசிதீர்க்க வந்தருளும் பகவானே போற்றி
குருபைரவ ராகிநின்ற கோமானே போற்றி
அருமறைக ளுக்குமெட்டா ஆண்டவனே போற்றி
கண்ட பைரவர்ஆனவரே போற்றி
கண்ட இடமெல்லாம் கருணைசெய்வாய் போற்றி 100

குரோத பைரவர் ஆனவரே போற்றி
விரோத மொன்றில்லா விழுத்துணையே போற்றி
உன்மத்த பைரவர் ஆனவரே போற்றி
ஜென்மத்திலும் உமை மறவேன் தெய்வமே போற்றி
கபால பைரவர் ஆனவரே போற்றி
சபாபதியின் மைந்தர் ஆனவரே போற்றி
சபரிமலை ஐயப்பா சரணம் சரணம்
வடுகாய நமஓம் வடுகாய போற்றி 108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் பாடல்கள்

ஐயப்பனே ஐயப்பனே ஓடிவா
ஆதி சிவன் புத்திரனே ஆடிவா எங்க
மெய்யப்பனே மெய்யப்பனே ஓடிவா -தும்பிக்
கையப்பனின் தம்பியே நீ ஆடிவா. (ஐயப்பனே)

பம்பா நதி குளிச்சு வந்தோம் ஓடிவா -எங்க
பாதையெல்லாம் காவலுக்கு கூடவா
அழுதாமல் ஏறிவந்தோம் ஓடிவா -எங்க
ஐயமெல்லாம் தீர்த்து வைக்க ஆடிவா. (ஐயப்பனே)

நெய்யுருக்கி எடுத்து வந்தோம் ஓடிவா - உனக்கு
மெய்யு ருகி படைக்கணுமே ஆடிவா
சந்தணத்தைக் குழைத்து வந்தோம் ஓடிவா - அத
சாத்தணுமே மேனியெல்லாம் ஆடிவா. (ஐயப்பனே)

மணிகண்ட நாயகனே ஓடிவா- உனக்கு
மணிதீபம் ஏற்றி வச்சோம் காணவா
ஜோதி வடிவானவனே ஓடிவா - மண்ணில்
ஜாதிமத பேதமெல்லாம் தீர்க்கவா. (ஐயப்பனே)

மெட்டெடுத்தோம் மெட்டெடுத்தோம் கேட்கவா -எங்க
மெட்டுக்கு ஒரு பாட்டுக் கட்ட ஓடிவா
பஜனை வச்சோம் பஜனை வச்சோம் கேட்கவா -எங்க
பஜனையில் பாட்டுப்பாட ஓடிவா. (ஐயப்பனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படியேறிவர வேண்டும்

படியேறிவர வேண்டும் ஐயப்பா உன்
பதம் கண்டு தொழவேண்டும் ஐயப்பா
முடி ஏந்தி வர வேண்டும் ஐயப்பா
இரு உன் முகம் பார்த்து அழவேண்டும் ஐயப்பா. (படியேறி)

துளசியில் மணிமாலை நான் சூட வேண்டும்
தாயவன் உனைப் போற்றி புகழ் பாடவேண்டும்
தாவியில் உடை சூடி மலையேற வேண்டும்
தண்களில் கற்பர ஒளி காண வேண்டும்.
(படியேறி)

பம்பையில் நீராடி என்பாவம் தீர்ப்பேன்
படியது பதினெட்டும் நான் பூஜை செய்வேன்
ஏழை என்துயர் யாவும் உன் காதில் சொல்வேன்
எனக்கென அருளன்றி வேறேன்ன கேட்பேன்.
(படியேறி)

நெய்யினில் அபிஷேகம் நான் காணவேண்டும்
நெய் என நான் மாறி உனைச் சேரவேண்டும்
ஒருமுறை உன் கோயில் நான் சேரவேண்டும்
ஐயனுன் முகம் பார்த்து உயிர் போக வேண்டும்.
(படியேறி)

சரணம் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா
சரண மடைந்தவர்க் கருளப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகர ஜோதியே ஐயப்பா
மகன் படும் துயரைக் கேளப்பா. (சரணம்)

மணிகண்டா நீ வா அப்பா
மாலை அணிந்தவனைப் பாரப்பா
மகர ஜோதியை காட்டப்பா.
மரணப் பிறவியைப் போக்கப்பா.
(சரணம்)

விரதம் பூண்டேன் நானப்பா
புனிதம் அடைந்தேன் சிறியனப்பா
கருணை முகத்தைக் கண்டேனப்பா
வியப்பில் ஆழ்ந்தேன் நானப்பா. (சரணம்)

**ஆஞ்சநேயர் பாடல்கள்**

ஆஞ்சநேயா ஓடி ஓடி வா வா உன்னை
ஆராதித்தோம் அசைந்து ஆடி வா வா
வெற்றிலை மாலை அணிந்து நீயும் வாவா மக்கள்
வெற்றியுடன் பணிந்து நின்றோம் வாவா. (ஆஞ்ச)

அன்பர் உள்ளம் அறிந்தவனே வாவா எங்கள்
அற்புதனே தற்பரனே வாவா ராமனை
நெஞ்சத்தில் கொண்டவனே வாவா
உன்னை ஆடிப் பாடிப் பரவுகின்றோம் வாவா. (ஆஞ்ச)

அற்புதனே ஆனந்தனே வாவா - எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக மாருதியே வாவா -இந்த
மணிகொண்ட வாலை ஆட்டி வாவா
மக்கள் துயர்தீர்த்திடவே வாவா. (ஆஞ்ச)

ராம பஜனை செய்ய நீயும் வாவா
ராம ராம ராம ராம ராம் ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம் ராம்
ராம ராம ராம ராம ராம் ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம் ராம்.

சத்யம் காக்கும் மாருதி
சத்யம் காக்கும் மாருதி சபலம் தீர்க்கும் மாருதி
நித்யம் எங்கள் நாவிலே நிற்கும் தெய்வம் பாருதி
மண்ணில் வந்த மாருதி கண்ணில் கண்ட மாருதி
காவல் தெய்வமாகவே வாழும் எங்கள் மாருதி.

சீரஞ்சீவி நாதனே வாருமய்யா
சஞ்சீவி மலை தாங்கி வாருமய்யா
காற்றோடு காற்றாக வாருமய்யா
கண்ணீரை நீர் மாற்ற வாருமய்யா. (சீரஞ்சீவி)

## ஆறுதல் நீ தாராய்

ஆஞ்சநேயனே ஓடிவாராய்
ஆறுதல் நீ தாராய்
பாவலைக்குள்ளே போராடி
உன்னை மறந்தேனே. (ஆஞ்சநேயனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்போன்ற என் மனசு
புயலாய் போன தய்யா
புன்னகை என்பதை நான் மறந்தேன்
புண்பட்டுப் போனதய்யா மனம். (ஆஞ்சநேயனே)

உன்னையே நாடியே ஓடிவந்தேன்
உண்மையைக் காட்டுமைய்யா
உறுதியான என் மனத்தினிலே
கல் ஒன்று விழுந்ததய்யா. (ஆஞ்சநேயனே)

ஆறுதல் என்பதை நானறியேன்
ஆனந்தம் என்பதை நான் அறியேன்
அன்பெனும் பாதையைக் காட்டிடுவாய்
அருளை வழங்கிடுவாய். (ஆஞ்சநேயனே)

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா - 47
## அஷ்டோத்ர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ பகவான் ஸாயி பாபாயா நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய ஸ்வரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸத்ய தர்ம பராயணாய நம:
ஓம் ஸ்ரீ வரதாய நம:
ஓம் ஸ்ரீ சத் புருஷாய நம:
ஓம் ஸ்ரீ சத்ய குணாத்மனே நம:
ஓம் ஸ்ரீ சாது வர்தனாய நம:
ஓம் ஸ்ரீ சாது ஜன போஷணாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சர்வக் ஞாய நம:

ஓம் ஸ்ரீ சர்வ ஜன ப்ரியாய நம:

ஓம் ஸ்ரீ சர்வ சக்தி மூர்த்தயே நம:

ஓம் ஸ்ரீ சர்வேசாய நம:

ஓம் ஸ்ரீ சர்வ சங்க பரித்யாகினே நம:

ஓம் ஸ்ரீ சர்வாந்தர் யாமினே நம:

ஓம் ஸ்ரீ மஹிமாத்மனே நம:

ஓம் ஸ்ரீ மகேஸ்வர ஸ்வரூபாய நம:

ஓம் ஸ்ரீ பர்த்தி கிராமோத் பவாய நம:

ஓம் ஸ்ரீ பர்த்திக்ஷேத்திர நிவாசினே நம:

ஓம் ஸ்ரீ பத்தி யசகாய ஷிர்டி வாசினே நம:

ஓம் ஸ்ரீ ஜோடி ஆதிபள்ளி சோமப்பாய நம:

ஓம் ஸ்ரீ பரத்வாஜ ரிஷி கோத்ராய நம:

ஓம் ஸ்ரீ பக்த வத்சலாய நம:

ஓம் ஸ்ரீ அபாந்தராத்மாய நம:

ஓம் ஸ்ரீ அவதார மூர்த்தயே நம:

ஓம் ஸ்ரீ சர்வ பய நிவாரிணே நம:

ஓம் ஸ்ரீ ஆபஸ்தம்ப சூத்திராய நம:

ஓம் ஸ்ரீ அபய ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ரத்னாகர வம்சோத்பவாய நம:

ஓம் ஸ்ரீ ஷிர்டி ஸாயி அபேதே சக்தி அவதாராய

ஓம் ஸ்ரீ சங்கராய நம:

ஓம் ஸ்ரீ ஷ்ர்டி ஸாயி மூர்த்தயே நம:

ஓம் ஸ்ரீ த்வாரகா மாயி வாஸினே நம:

ஓம் ஸ்ரீ சித்ராவதி தடபுட்டபர்த்தி விஹாரினேநம:

ஓம் ஸ்ரீ சக்தி ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ சரணாகத த்ராணய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஆனந்தாய நம:

ஓம் ஸ்ரீ ஆனந்த தாய நம:

ஓம் ஸ்ரீ ஆர்த்த த்ராண பராயணாய நம:

ஓம் ஸ்ரீ அனாத நாதாய நம:

ஓம் ஸ்ரீ அஸஹாயாய நம:

ஓம் ஸ்ரீ லோக பாந்தவாய நம

ஓம் ஸ்ரீ லோக ரக்ஷ பராயணாய நம:

ஓம் ஸ்ரீ லோக நாதாய நம:

ஓம் ஸ்ரீ தீனஜன போஷணாய நம

ஓம் ஸ்ரீ மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம:

ஓம் ஸ்ரீ முக்தி ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ கலுஷ விதூராய நம:

ஓம் ஸ்ரீ கருணாகராய நம:

ஓம் ஸ்ரீ சர்வா தாராய நம:

ஓம் ஸ்ரீ சர்வ ஹ்ருத் வாஸினே நம:

ஓம் ஸ்ரீ ஸர்வ புண்ய பலப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ சர்வ பாப க்ஷயகராய நம:

ஓம் ஸ்ரீ சர்வ ரோக நிவாரிணே நம:

ஓம் ஸ்ரீ சர்வ பாத ஹராய நம:

ஓம் ஸ்ரீ அனந்த நுத கர்த்தருணே

ஓம் ஸ்ரீ ஆதி புருஷாய நம:

ஓம் ஸ்ரீ ஆதி சக்தயே நம:

ஓம் ஸ்ரீ அபரூப சக்தினே நம:

ஓம் ஸ்ரீ அவ்யக்த ரூபிணே நம:

ஓம் ஸ்ரீ காம க்ரோத த்வம்ஸினே நம:

ஓம் ஸ்ரீ கனகாம்பர தாரிணே நம:

ஓம் ஸ்ரீ அற்புத சர்வாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஆபத் பாந்தவாய நம:

ஓம் ஸ்ரீ ப்ரேமாத்மனே நம:

ஓம் ஸ்ரீ பிரேம மூர்த்தயே நம:

ஓம் ஸ்ரீ ப்ரேம ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ப்ரியாய நம

ஓம் ஸ்ரீ பக்த ப்ரியா நம:

ஓம் ஸ்ரீ பக்த மந்தாராய நம

ஓம் ஸ்ரீ பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம

ஓம் ஸ்ரீ பக்த ஜன ஹ்ருதயாலயாய நம:

ஓம் ஸ்ரீ பக்த பராதீனாய நம:

ஓம் ஸ்ரீ பக்தி ஞான ப்ரதீபாய நம:

ஓம் ஸ்ரீ பக்தி ஞான ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ஸுக்ஞான மார்க்க தர்சகாய நம:

ஓம் ஸ்ரீ ஞான ஸ்வரூபாய நம:

ஓம் ஸ்ரீ கீதா போதகாய நம:

ஓம் ஸ்ரீ ஞான சித்தி தாய நம:

ஓம் ஸ்ரீ ஸுந்தர ரூபாய நம:

ஓம் ஸ்ரீ புண்ய புருஷாய நம:

ஓம் ஸ்ரீ பலப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ புருஷோத்தமாய நம:

ஓம் ஸ்ரீ புராண புருஷாய நம:

ஓம் ஸ்ரீ அதீதாய நம:

ஓம் ஸ்ரீ காலாதீதாய நம:

ஓம் ஸ்ரீ சித்தி ரூபாய நம:

ஓம் ஸ்ரீ சித்தி சங்கல்பாய நம:

ஓம் ஸ்ரீ ஆரோக்கிய ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ அன்ன வஸ்திர தாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சம்சாரதுக்க க்ஷயகராய நம:

ஓம் ஸ்ரீ சர்வாபீஷ்ட ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ கல்யாண குணாய நம:

ஓம் ஸ்ரீ கர்ம த்வம்சினே நம:

ஓம் ஸ்ரீ சாது மானஸ சோபிதாய நம:

ஓம் ஸ்ரீ சர்வமத சம்மதாய நம:

ஓம் ஸ்ரீ சாது மான்ஸ் பரிசோதகாய நம:

ஓம் ஸ்ரீ சாதகானுக்ரஹ வடவ்ருஷ ப்ரதிஷ்டாப காய

ஓம் ஸ்ரீ சகல சம்சய ஹராய நம:

ஓம் ஸ்ரீ சகல தத்வ போதகாய நம:

ஓம் ஸ்ரீ யோகீஸ்வராய நம:

ஓம் ஸ்ரீ யோகீந்த்ர வந்திதாய நம:

ஓம் ஸ்ரீ சர்வ மங்கள கராய நம:

ஓம் ஸ்ரீ சர்வ சித்தி ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ஆபந் நிவாரினே நம:

ஓம் ஸ்ரீ ஆர்த்தி ஹராய நம:

ஓம் ஸ்ரீ சாந்த மூர்த்தயே நம:

ஓம் ஸ்ரீ ஸுலப் ப்ரஸன்னாய நம:

ஓம் ஸ்ரீ பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாய நம:

மங்களம்!! மங்களம்!! மங்களம்!

ஓம் சாந்தி !!! சாந்தி!!! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

"உதவி பெற்றவன் அந்த உதவியை
என்றைக்கும் மறக்க கூடாது
உதவி செய்தவன் தான்
செய்த உதவியை என்றைக்கும்
நினைத்துப் பார்க்க கூடாது"

என்ற கூற்றுக்கு இணங்க நன்றி என்ற நற்குணத்தை சொல்வது எமது கடமையாகும். எமது குடும்ப குத்துவிளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம் அமரர் காமாட்சிப்பிள்ளை அணைந்த செய்தியைக் கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலம், முகப்புத்தகம் (Facebook) மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், மலர் கொத்து சாத்தியவர்களுக்கும், எம்முடன் இரவு நேரம் என்று பாராது உடன் வந்து உதவியவர்களுக்கும் எமது குடும்ப குத்துவிளக்கின் இறுதி கிரியையில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், குத்துவிளக்கின் இறுதி யாத்திரை அன்று இல்லத்தில் இருந்து கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு வெய்யில் என்றும் பாராது நெடுதூரம் செல்வதற்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் "காமாட்சி தீபம்" என்னும் மலருக்கு ஆத்ம சாந்தியுரை வழங்கியவர்களுக்கும் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும் மற்றும் ஓராண்டு நினைவு நாளுக்கு உதவி புரிந்த அனைவருக்கும் வேறு பல வகைகளில் உதவி புரிந்தவர்களுக்கும் காமாட்சி தீபத்தை வெளியிடுவதற்கு குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும் நன்றி என்ற நற்குணம் எல்லாப் பண்புகளிலும் சிறந்த நற்குணமாக இருக்கின்றது என்ற வகையில் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**இங்ஙனம்**

**மக்கள்,**

**மருமக்கள்**

**பன்னாலை**
**தெல்லிப்பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வம்ச**

- **இராசதுரை**
- செல்வரத்தினம்
- குணரத்தினம்
- பரமேஸ்வரி
- இரத்தினேஸ்வரி
- நா

இராசதுரை →

- **காமாட்சிப்பிள்ளை**
- திருஞானசம்பந்தமூர்த்தி + கருணேஸ்வரி
  - ராம் பிரசாத்
- சரஸ்வதி + சீனிவாசகம்
  - ரவிச்சந்திரன் + சந்திரிகா
    - கரிஷன்
    - றிஷிகன்
    - சாருகன்
    - ஆதர்சன்
- ப ... ஜெ ... இ

காமாட்சிப்பிள்ளை →

- விமலாதேவி + இராமநாதன்
  - கபிரதன்
  - பகீரதி + சஞ்சீவன்
    - சண்முகன்
    - சங்கவி
- இராசகுமாரி + பராபரன்
  - சிந்துஜா
- ஜெயந்தி + கணேசதாசன்
  - தயாளன்
  - துவாரகன்
  - வைஸ்ணவி
- மனோக + மேரி
  - சினே + ஸ்ரிப
    - கீன்
    - றியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்ச விருட்சம்

ரி நாகேஸ்வரி சிவசுப்பிரணியம்

புவனிகாவல் சேகரமுதலி
வழித்தோன்றல்

கதிரேசு + வள்ளிப்பிள்ளை

வேலாயுதம் + தங்கப்பிள்ளை

பரமேஸ்வரி
+
ஜெயரத்தினம்
இதயகுமார்
இதுஷன்
இதிஷா

சுப்பிரமணியம்
+
செல்வராணி
ஐங்கரன்
+
பிருந்தா
ஜனி
அபிலேஸ்

நகுலேஸ்வரன்
+
ஜெகதீஸ்வரி

சிவசுதன்
+
தட்சாயினி
மீனாட்சி
விஸ்ணு

தர்சினி
+
பரன்
ஆசிகா
அட்சரன்

கஜாந்தி
+
ராஜ்
கருணியா
ரோணக்

னோகரன்
+
மேரி
சினேட்
+
ஸ்ரிபன்
கீன்
றியா

மனோகரி
+
சிறீதரன்
சுரேஸ்கண்ணா
பிரணவன்
சிந்துறா

சிவகுமார்
(றஞ்சன்)
+
வைதேகி
லினேஸ்

சுரேஸ்
(கண்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org